www.padippakam.com


செப். 2005

ரூ. 5.00




# புதிய ஜனநாயகம்

## கிராமப்புற வேலைவாய்ப்பு: இன்னுமொரு காகிதச் சட்டம்



நகரத்தில் வேலை தேடி அலையும் கிராமப்புற விவசாயக் குடும்பம்

படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கர்களின் மனசாட்சியை உலுக்கும்

# ஒரு தாயின் போராட்டம்!

"எனக்கு அந்த உண்மை தெரிய வேண்டும்; ஈராக் மீது ஏன் இந்தப் போர்?'' என்று தனது அன்பு மகனைப் பறிகொடுத்த வேதனையில் கேட்கிறார் அந்த அமெரிக்கத் தாய். துயரத்தை நெஞ்சிலே சுமந்து கொண்டு, பயங்கரவாத அதிபர் புஷ்ஷுக்கு எதிராகத் தன்னந்தனியாக அவர் நடத்திய உறுதியான போராட்டம், அமெரிக்க மக்களின் மனசாட்சியை உலுக்கி, போர் எதிர்ப்புப் போராட்டத்துக்குப் புது ரத்தம் பாய்ச்சியுள்ளது. கலிபோர்னியா மாநிலத்தின் வகாவில்லி நகரைச் சேர்ந்த அந்தத் தாயின் பெயர் சின்டி ஷீஹன்.

அவரது அன்பு மகனாகிய கேசி ஷீஹன், அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றிய தனித்தேர்ச்சிமிக்க இளம் சிப்பாய். கடந்த 2004 ஏப்ரல் 4-ஆம் தேதியன்று ஈராக்கில், ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போராளிகளின் குண்டுவீச்சுத் தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார்.

இரு மாதங்களுக்குப் பிறகு சின்டி ஷீஹன் தனது குடும்பத்தோடு அதிபர் புஷ்ஷைச் சந்திக்கச் சென்றார். ஆனால், அங்கே ஆறுதலுக்குப் பதிலாக அவமரியாதைதான் கிடைத்தது. ''இன்று நாம் யாரைக் கௌரவிக்க வேண்டும்? என்று அசைபோடும் தனது வாயுடன் உதவியாளர்களிடம் கேட்டுக் கொண்டே அதிபர் புஷ் வேகமாக நடந்து சென்றார். ஆறுதலாக ஒரு வார்த்தை கூட அவர் வாயிலிருந்து வரவில்லை. எங்களை நோக்கிய அவரது கண்களில் கருணை இல்லை. எதைப் பற்றியும் கவலைப்படாதவராக அவரது தோற்றம் காட்டியது. யதார்த்தத்திற்கும் மனிதத் தன்மைக்கும் முற்றிலும் வேறுபட்ட ஒரு மனிதப் பிறவிதான் அவர். அவரது கண்கள் வெறுமையாகவும், உள்ளே ஒன்றுமில்லாத வேர்க்கடலை ஓடு போலவும் காட்சியளித்தது'' என்று அந்தச் சந்திப்பை நினைவு கூர்கிறார், ஷீஹன்.

ஈராக்கில் கொல்லப்பட்ட அமெரிக்க இராணுவச் சிப்பாயின் குடும்பத்துக்கு ஆறுதல் சொல்லக் கூட அதிபர் தயாராக இல்லை எனில், ஈராக் மீதான இந்தப் போர் எதற்காக? யாருக்காக? என்னைப் போல் எத்தனையோ குடும்பங்கள் தங்கள் மகனையும் குடும்பத் தலைவனையும் உற்றாரையும் ஏன் இப்படி பறிகொடுக்க வேண்டும்? கூடாது; இந்தப் போர் இனியும் தொடரக் கூடாது என்று அவர் தீர்மானித்தார். ''இராணுவக் குடும்பங்களின் உரத்த குரல்'' (உள்ளார்ந்த எண்ணத்தை வெளிப்படையாகக் கூறும் அரங்கம்) எனும் அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டு, போர் எதிர்ப்பு இயக்கத்தில் ஊக்கமாகச் செயல்பட்டு வருகிறார்.

பேரழிவுக்கான ஆயுதங்களை வைத்துக் கொண்டு பயங்கரவாதத்தை ஊட்டி வளர்ப்பதாகக் குற்றம் சாட்டி ஈராக் மீது நடத்தப்பட்டுள்ள இந்தப் போர் காட்டுமிராண்டித்தனமாக மாறி விட்டதை அம்பலப்படுத்தும் இவ்வியக்கத்தினர், உடனடியாக ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருகின்றனர். கடந்த சில மாதங்களாக ஈராக்கில், அமெரிக்கப் படை வீரர்கள் அடுத்தடுத்து கொல்லப்பட்டு, விமானங்களில் வந்திறங்கும் சவப்பெட்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியதும், அமெரிக்க மக்களிடம் இந்தக் கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஆங்காங்கே பரவத் தொடங்கியுள்ளன.


அமெரிக்க மக்களிடம் அதிருப்தி பெருகி வருவதைக் கண்டஞ்சும் அதிபர் புஷ், அதிலிருந்து தப்பிக்க விடுமுறையில் ஓய்வெடுக்கச் செல்வதாகக் கூறி நழுவிச் செல்வது வழக்கம். இப்படித்தான் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அவர் டெக்சாஸ் மாகாணத்தின் கிராஃபோர்டிலுள்ள தனது கால்நடைப் பண்ணையில் ஓய்வெடுக்க ஓடினார். அங்கே பொதுமக்கள் தமது கோரிக்கைகளுடன் எப்போதும் தன்னை சந்திக்கலாம் என்றார். புஷ் பதவிக்கு வந்து அவர் இப்படி ஓய்வெடுக்க ஓடுவது ஐந்தாவது தடவையாகும். கடந்த 36 ஆண்டுகளில் எந்த அதிபரும் தொடர்ந்து ஐந்து வாரங்களாக இப்படி ஓய்வெடுத்துக் கொண்டு முடங்கிக் கிடந்ததில்லை என்ற வரலாற்றுச் 'சாதனை'யையும் அவர் படைத்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் 4-ஆம் தேதியன்று சின்டி ஷீஹன் அதிபர் புஷ்ஷைச் சந்திக்க அவரது கால்நடைப் பண்ணைக்குச் சென்றார். ஆனால், அதிபர் புஷ் அவரைச் சந்திக்க மறுத்துவிட்டார்.

ஷீஹன் தன்னந்தனியாக இருந்த போதிலும், அதிபரின் இந்தத் திமிர்த்தனத்துக்கும் அவமானப்படுத்துதலுக்கும் எதிராக அவரது பண்ணையின் முன்பாகவே போராட்டத்தில் இறங்கினார். ''ஈராக் மீது ஏன் இந்த ஆக்கிரமிப்புப் போர்? எனக்கு அந்த உண்மை தெரிய

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

அமெரிக்க அதிபர் புஷ் ஓய்வெடுத்து வரும் கால்நடைப் பண்ணைக்கு முன்பாக, ஈராக் போரை எதிர்த்து இரவு பகலாகப் போராடி வரும் சின்டி ஷீஹன்.






படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 20**

**இதழ் 11**

**செப்டம்பர் 2005**

**உள்நாடு**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


# கல்விக் கொள்ளையர்களுடன் கைகோர்த்த உச்சநீதி மன்றம்

**நா**ட்டிலுள்ள கல்வித்துறைப் பெருமுதலாளிகளுக்கு இந்த ஆண்டு 'சுதந்திர தின'ப் பரிசொன்றை உச்சநீதி மன்றம் வழங்கியிருக்கிறது. அவர்கள் தமது பகற் கொள்ளையை மேலும் விரிவுபடுத்திக் கொள்வதற்கு கட்டற்ற சட்டபூர்வ உரிமம் வழங்கும் தீர்ப்பு மூலம் அவ்வாறு செய்துள்ளது. சிறுபான்மைப் பிரிவு மற்றும் சிறு பான்மைப் பிரிவுக்கானவை அல்லாத, அரசு உதவி பெறாத எந்தவொரு தனியார் - சுயநிதிக் கல்வி நிறுவனமானாலும் அரசுக்கான இடஒதுக்கீடு மற்றும் சமூக ரீதியி லான (தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்கள், பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய சாதிகளுக்கான) இட ஒதுக்கீடுகளை இரத்து செய்து விட்டது. அரசின் கொள்கைப் படியான இடஒதுக்கீடு முறையைத் 'திணிப்பது' அவற்றின் உரிமையிலும் தன்னாட் சியிலும் கடுமையான ஆக்கிரமிப்புச் செய்வதாகும் என்று பாய்ந்திருக்கிறது, உச்சநீ திமன்றம்.

''தொழிற்கல்வி தருவதற்கான அரசு நிதி ஆதாரங்கள் வரம்புக்குட்பட்டுள்ளது என்பதற்காகவே, அதைவிடச் சிறந்த தொழிற்கல்வி வழங்க விரும்பும் தனியார் நிறு வனங்கள் மீது குறைவான தகுதியுடைய மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்து தரும் கொள்கையை அரசு திணிக்க முடியாது'' என்று கல்வித்துறைப் பகற்கொள்ளை யர்களுக்காகவும், மேல்சாதிக் கும்பலுக்காகவும் உச்சநீதி மன்றத்தின் ஏழு நீதிபதி கள், பச்சையாக வக்காலத்து வாங்கி ஏகமனதாக வாதாடியிருக்கிறார்கள். மேலும், ''இந்தத் தனியார் - சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் அரசிடமிருந்து எவ்வித நிதியுதவி யும் பெறாததால் நியாயமாகவும், வெளிப்படையாகவும், சுரண்டலற்ற முறையிலும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளவும், அதற்கான தேர்வு முறையைத் தெரிவு செய்து கொள்ளவும் தளையற்ற அடிப்படை உரிமை உண்டு. சிறுபான்மைப் பிரிவுக் கான கல்வி நிறுவனங்கள், தங்கள் சிறுபான்மைத் தன்மை பாதிக்காதவாறு சிறு பான்மை பிரிவு அல்லாத யாரை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளவும் உரிமை உண்டு. தனியார் - சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் நன்கொடை வசூலிக்கக் கூடாது; அதேசமயம் கல்விக் கட்டணங்களைத் தாமே தீர்மானித்துக் கொள்ளும் உரிமையும் உண்டு'' என்று தாராள - தயாள அனுமதியும் உச்சநீதி மன்றம் வழங்கியுள்ளது. அரசு மற்றும் சமூக ரீதியிலான இடஒதுக்கீடுகளை இரத்து செய்த உச்சநீதி மன்றம், வெளி நாட்டில் வாழும் இந்தியர்களுக்கான இட ஒதுக்கீட்டுக்கு நியாயவாதம் புரிந்து அனு மதித்துள்ளது; இதன் மூலம் வரைமுறையில்லாத வசூல் கொள்ளைக்கு வசதி செய்து கொடுத்துள்ளது. மொத்தத்தில், உச்சநீதி மன்றத்தின் இத்தீர்ப்பு ''வழங்கப்பட்ட தீர்ப்பு'' அல்ல; ''வாங்கப்பட்ட தீர்ப்பு'' என்பதில் சந்தேகமில்லை.

நீதிமன்றச் செயற்பாடுகளை உன்னிப்பாகவும் தொடர்ந்தும் கவனித்து வரும் யாருக்கும் இத்தீர்ப்பு ஒன்றும் அதிர்ச்சிகரமானதோ, வியப்புக்குரியதோ கிடை யாது. இதுபோன்ற முன்கூட்டித் தீர்மானிக்கப்பட்ட நோக்கிலேயே, வழமையான தீர்ப்புகளையே அது வழங்கி வருகின்றது. நீதிமன்றம் நேர்மையான - ''நடு நிலை''யான நியாயாதிபதிகளைக் கொண்டிருக்கவில்லை. போலீசுத்துறையைப் போன்றே அரசு எந்திரத்தின் இன்னொரு கொடூர அங்கமாகவே உள்ளது. இவை பாசிச பயங்கரவாதப் பாம்புகளும் கோட்டான்களும் பதுங்கியுள்ள இருட்குகைகள் என்பதை மீண்டும் நிரூபிக்கும் எடுத்துக்காட்டுதான் இத்தீர்ப்பு. இந்துத்துவத்திற்கு மதச் சார்பு - மதவெறி விளக்கமளித்தது; பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் - பன்னாட்டு முதலாளிகளுக்கு விற்பதை நியாயப்படுத்தியது; ஆலைகளை மூடவும் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யவும் முதலாளிகளுக்கு உரிமை - அதிகா ரம் வழங்குவது; அதேசமயம், தொழிலாளிகள் - அரசு அலுவலர்களின் வேலை நிறுத்த அடிப்படை உரிமையை மறுப்பது, பொதுமக்கள் - இயக்கங்களின் போராட்ட உரிமைக்குத் தடைவிதிப்பது; 'கோக்' போன்ற பன்னாட்டு நிறுவனங்க ளுக்குப் பாதுகாப்பளிப்பது; கிரிமினல் அரசியல்வாதிகளுக்குப் பாதுகாப்பளிப் பது; அரசு பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவது என்று பல வகையிலும் பிற் போக்கு பாசிசத் தீர்ப்பு வழங்கி வந்திருக்கின்றது உச்சநீதி மன்றம். இடஒதுக்கீட் டிற்கு எதிராகவும், சாதி-மத ஆதிக்கத்துக்கு ஆதரவாகவுமே எப்போதும் செயல் பட்டு வந்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாக வந்திருப்பதுதான் சுயநிதிக் கல்லூரிக ளில் இடஒதுக்கீடு குறித்த இந்தத் தீர்ப்பும் ஆகும்.

உண்மைக்கும் யதார்த்தத்துக்கும் புறம்பான பல மோசடியும் பித்தலாட்டமும் நிறைந்த வாதங்களை முன்வைத்து, நீதிபதிகள் இத்தீர்ப்புக்கு முட்டுக் கொடுத் துள்ளார்கள். முதலாவதாக, சுயநிதிக் கல்லூரிகள் முற்றும் முழுதாக அந்தரத்தில்

தொடர்ச்சி 8-ஆம் பக்கம்

www.padippakam.com

## தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்திரவாதச் சட்டம்

# புண்ணுக்குப் புனுகு தடவும் காங்கிரசின் மோசடி

சென்னையில் இருந்து கோவைக் குச் செல்லும் சேரன் விரைவுத் தொடர் வண்டியில், கடந்த ஜூலை மாதம் ஒரு இளைஞர் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்ட செய்தியைப் பத்திரி கைகள் அனைத்தும் பரபரப்போடு வெளியிட்டன. அதேசமயம், அந்த இளைஞர் ஓடும் ரயிலில் ஏன் தற் கொலை செய்து கொண்டார் என்ற கார ணத்தை எவ்விதப் பரபரப்பும் இன்றி, அடக்கியே வெளியிட்டன.

சேரன் விரைவுத் தொடர்வண்டி யில் தற்கொலை செய்து கொண்ட ரவிக் குமார் என்ற அந்த இளைஞர் கோவை - பீளமேடு பகுதியைச் சேர்ந்தவர். இயந்திரவியலில் பட்டயப் படிப்பு முடித்திருந்த அவர், சென்னைக்கு அரு கில் உள்ள திருப்பெரும் புதூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் 5,500 ரூபாய் சம்பளத்திற்கு வேலை பார்த்து வந்தி ருக்கிறார். திடீரென அந்நிறுவனத்தில் வேலையிழப்பு ஏற்பட்டதையடுத்து, வேலை தேடி அலைந்த அவருக்கு, வெறும் 3,500/- ரூபாய் சம்பளத்திற் குத் தான் வேலை கிடைத்தது. தனது படிப்புக்கு ஏற்றபடி நிறைவான, உத்தர வாதமான வேலை கிடைக்காத அவ லம்தான் ரவிக்குமாரைத் தற்கொலைக் குத் தள்ளிவிட்டிருக்கிறது.

தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பாக, அவர் போலீசுக்கு எழுதி யுள்ள கடிதத்தில், ''நான் வேலையில் லாத காரணத்தினாலும், இந்த உலகில் உயிர் வாழப் பிடிக்காத காரணத்தினா லும் தற்கொலை செய்து கொள்கின் றேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

• இந்தியாவிலுள்ள மிகவும் செழு மையான விவசாயப் பகுதிகளுள் ஆந் திராவின் குண்டூர் மாவட்டமும் ஒன்று; இம்மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயக் கூலியான ஜெயலெட்சுமிக்கு கடந்த அறுவடைக் காலத்தின்பொழுது வெறும் ஆறு நாட்களுக்குத்தான் வேலை கிடைத்தது. அவருக்குக் கிடைத்த ஒருநாள் கூலியோ வெறும் இருபத்தைந்து ரூபாய்தான். இதை வைத்துக் கொண்டுதான் ஜெயலெட்சு மியின் இரண்டு குழந்தைகள், அவரது மாமியார் உள்ளிட்ட நான்கு பேர் கொண்ட குடும்பம் காலத்தை ஓட்டி யாக வேண்டும். வேலை தேடிப் போவ தாகக் கூறிவிட்டுச் சென்ற ஜெயலெட்சு மியின் கணவர், இப்பொழுது எங்கே இருக்கிறாரென்று கூட அவருக்குத் தெரியவில்லை. கடந்த முறை போல, நானூறோ, ஐநூறோ சம்பாதித்துக் கொண்டு திரும்புவார் என்ற நம்பிக்கை தான் அவரிடம் இப்பொழுது ஒட்டிக் கொண்டுள்ளது.

• இந்திய ரெயில்வே நிர்வாகம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 2,000 காலியடங்களை நிரப்ப விளம்பரம் செய்தபொழுது, அதற்கு 74 இலட்சம் பேர் விண்ணப்பம் போட்டுள்ளனர். வெறும் எட்டாவது படித்திருந்தால் போதும் என்ற தகுதியினைக் கொண்ட அந்த வேலைக்கு, பொறியியல் பட்ட தாரிகள் 20,000 பேரும்; வர்த்தக மேலாண்மை முதுகலை (M.B.A.) பட்டப்படிப்பு படித்தவர்கள் 3,000 பேரும் விண்ணப்பித்துள்ளனர்.

- படித்தவன், படிக்காதவன்; நகரம், கிராமம் என்ற வேறுபாடு எதுவுமின்றி ஒரு சாபக்கேடு போல வேலையில் லாத் திண்டாட்டம் இந்திய உழைக்கும் மக்களைப் பிடித்தாட்டி வருவதற்கு இவை போன்ற பல உதாரண ங்களைத் தர முடியும். தனியார்மயம் - தாராள மயம் நடைமுறைக்கு வந்த பின், வேலையில்லாத் திண்டாட்டம் பல்கிப் பெருகியிருப்பதோடு, அப்பிரச்சினை யைத் தனியார்மயத்தால் தீர்க்க முடி யாது என்று ஆளும் கும்பல் ஒத்துக் கொள்ள வேண்டிய கட்டாயமும் தோன்றிவிட்டது.

### புள்ளி விவர மோசடி

இந்திய அரசின் திட்டக் கமிசன் வெளியிட்டுள்ள 2002-03 ஆம் ஆண் டுக்கான பொருளாதார அறிக்கையில், ''1993-94 ஆம் ஆண்டில் 2 கோடியாக இருந்த வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை, 1999-2000-இல் 2.6 கோடியாக அதிகரித்திருப்பதாக''க் குறிப்பிட்டுள்ளது. 2000 ஆண்டிற்குப் பிறகு, வேலையில்லாதவர்கள் பற்றிய கணக்கு எடுப்பதில் கூட அரசு அக் கறை காட்டவில்லை.

வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி அரசாங்கம் வெளியிட்டுள்ள இந் தப் புள்ளி விவரம், முழுப் பூசணிக் காயைச் சோற்றில் மறைக்கும் மோசடி என அம்பலப்படுத்தியிருக்கிறது, மும்பையைச் சேர்ந்த அரசியல் பொருளாதாரத்திற்கான ஆய்வுக் குழு. உழைக்கின்ற வயதினை வந்தடைந்து விட்ட, எந்த வேலை கிடைத்தாலும் அதைச் செய்யத் தயாராக உள்ள உழைப்பாளிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுவதன் மூலம், வேலையில்லாத் திண்டாட்டத்தின் அபாயத்தை இந்திய அரசு குறைத்து மதிப்பிட்டு வெளியிட்டிருப்பதாக இக் குழு குற்றஞ்சுமத்துகிறது.

இக்குழுவினரின் மதிப்பீட்டின்படி 2000-ஆம் ஆண்டில் வேலையில்லாத வர்களின் எண்ணிக்கை 24 கோடி; 2004-இல் உழைக்கக் கூடிய திறன் பெற்றவர்களில் சரி பாதிபேர் - அதா வது, 31 கோடி பேர் வேலையில்லாமல் திண்டாடுவார்கள் எனக் குறிப்பிட் டுள்ளது. (இந்தியப் பொருளாதாரத் தின் கூறுகள், இதழ் எண்: 36, 37)

அரசாங்கம் வேலையில்லா பட் டாளத்தின் எண்ணிக்கையை இப்படி குறைத்துக் காட்டுமா எனச் சந்தேகிப் பவர்களுக்காக இன்னொரு ஆதாரத் தைத் தருவோம். வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்ட ரவிக் குமார் சேரன் விரைவுத் தொடர் வண்டி யில் தற்கொலை செய்து கொண்ட அதே ஜூலை மாதத்தின் இறுதியில், சி.ஐ.ஐ. என்ற தரகு முதலாளிகள் சங் கம் சென்னையில் நடத்திய கருத்தரங் கில், 2012-ஆம் ஆண்டு வாக்கில் இந் தியாவில் 40 கோடி பேர் வேலை தேடி அலைவார்கள் என்ற அதிர்ச்சி தரும் புள்ளி விவரம் வெளியிடப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டம், தரகு முதலாளிகளே ஒப்புக் கொண்டுள்ள இப்புள்ளி விவரத்திற்கு மேலே போக லாமே தவிர, கீழே விழுவதற்கு வாய்ப்பே இல்லை.

வேலையில்லாமல் திண்டாடுபவர் களின் அவல நிலைமை ஒருபுறமிருக் கட்டும்; வேலையில் இருப்பவர்களின்


படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கை நிலைமையும் கூட ஒளிமயமானதாக இருக்கவில்லை என்பதே உண்மை. இந்தியா கணினி யுகத்தில் நுழைந்த பின்னும் கூட, விவசாயம் தான் வேலை வாய்ப்பு வழங்குவதில் முதலிடத்தில் இருக்கிறது. 1999-2000-க்கான பொருளாதார அறிக்கையின் படி, வேலைவாய்ப்பு வழங்குவதில் விவசாயம் 56.7 சதவீதப் பங்கையும்; தொழிற்துறை 17.9 சதவீதப் பங்கையும்; சேவைத்துறை 25.7 சதவீதப் பங்கையும் கொண்டிருந்தன.

இப்புள்ளி விவரத்தின் படி, விவசாயத்தின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்ற 21.58 கோடி பேரில், 21.26 கோடி பேர் சிறு, நடுத்தர விவசாயிகள் மற்றும் கூலி விவசாயிகள். இவர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு கிடைக்கப் போவதில்லை; நாளுக்கு நாள் நசிவடைந்து கொண்டே போகும் விவசாயத்தில் இருந்து இவர்களுக்குப் போதிய வருமானமும் கிடைக்கப் போவதில்லை. எனினும் வருமானம் ஈட்டித்தரத்தக்க இலாபகரமான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களாக இவர்களை வகைப் பிரித்து வைத்திருக்கிறது, மைய அரசு.

சேவைத்துறையின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுள்ள 25.7 சதவீதப் பேரில், வெறும் 0.2 சதவீதப் பேர்தான் இன்ஃபோஸிஸ், விப்ரோ, டி.சி.எஸ்., போலாரிஸ் போன்ற தகவல் - தொழில்நுட்ப நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர். மீதிப் பேரெல்லாம், பணக்காரர்களின் வீடுகளையும், குடியிருப்புகளையும் காவல் காக்கும் செக்யூரிட்டிகள்; ஹோட்டல் சர்வர்கள்; கூரியர் நிறுவனங்களில் தபால் பட்டுவாடா செய்யும் ஊழியர்கள்; பெட்டிக் கடை நடத்துபவர்கள் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள்தான்.

சுருக்கமாகச் சொன்னால், இந்தியாவில் வேலை வாய்ப்பு கிடைக்கப் பெற்றவர்களில் வெறும் 8 சதவீதப் பேர் தான் ''அதிர்ஷ்டசாலிகள்''. இவர்கள் தான் வங்கிகள், காப்பீடு நிறுவனங்கள் போன்ற அரசுத் துறையிலும்; பொதுத் துறை ஆலைகளிலும், பெரும் தனியார் நிறுவனங்களிலும் வேலை பார்ப்பவர்கள்; ஒப்பீட்டு அளவில் நல்ல வருமானமும், உத்தரவாதமுமான வேலை வாய்ப்பும் கொண்டவர்கள்.

மீதமுள்ள 92 சதவீத உழைப்பாளிகள், விவசாயம், நெசவு, கைத்தொழில், சிறு - நடுத்தர தொழில்கள், வணிக நிறுவனங்கள் போன்ற தொழில்களை நம்பி வாழும் அத்தக் கூலிகள்தான்! இத்தொழில்கள் மூலம் இவர்களுக்குக் கிடைக்கும் சம்பளமோ, கூலியோ, வருமானமோ, இவர்கள் குடும்பங்களின் அடிப்படைத் தேவைகளை - வீடு, உணவு, கல்வி, மருத்துவம் போன்றவற்றை ஈடு செய்யப் போதுமானதாக இருக்குமா என்பதற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. ஆனாலும், இந்த 92 சதவீதப் பேரையும் நிரந்தர வேலையும் வருமானமும் கொண்டவர்களைப் போல வகைப் பிரித்து மோசடி செய்து வருகிறது, இந்திய அரசு.



**நிரந்தரமான வேலை கிடைக்காத விரக்தியால், தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்ட ரவிக்குமாரின் கருகிப் போன சடலம்.**

## தாராளமயம் முழுங்கிய வேலைவாய்ப்புகள்

தாராளமயத்திற்கு முன்பு, 1983-84 ஆம் ஆண்டுகளில், மொத்த வேலை வாய்ப்பில் 63.2 சதவீதமாக இருந்த விவசாயத் துறையின் பங்கு, 1999-2000 ஆண்டுகளில் 56.7 சதவீதமாகக் குறைந்துவிட்டது. தனியார்மய - தாராளமயத் தாக்குதலினால் விவசாயம் உருக்குலைந்து போனதால், விவசாயத் துறையில் ஏறத்தாழ 2.7 கோடி புதிய வேலை வாய்ப்புகள் உருவாகாமல் ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதேகால கட்டத்தில், அந்நிய மூலதனம் நுழைவதற்கு வசதியாக, எல்லாத் 'தடைகளையும்' தகர்த்து எரிந்த பின்னும், தொழிற்துறை வேலைவாய்ப்புகளில் புதிய பாய்ச்சல் எதுவும் ஏற்படவில்லை. உள்ளதும் போச்சு நொள்ளக் கண்ணா என்ற கதை தான் உருவாகியிருக்கிறது. பெரும் தொழிற்துறையைப் பொருத்தவரையில் 1997 தொடங்கி 2001 வரையில் ஐந்தே ஆண்டுகளில் மூன்று இலட்சம் தொழிலாளர்கள் வேலையில் இருந்து துரத்தப்பட்டுள்ளனர். 2003-ஆம் ஆண்டில் மட்டும் இத்துறையில் 10 இலட்சம் தொழிலாளர்களின் வேலை பறிக்கப்பட்டிருப்பதாக திட்டக் கமிசன் கூறியிருக்கிறது.

இப்படி ஒருபுறம் ஏற்கெனவே ஏதாவதொரு வேலையில் இருந்த தொழிலாளர்களின் வாழ்க்கை அலங்கோலமாக்கப்பட்ட பொழுது, இந்தியப் பொருளாதாரமோ, தாராளமயத்தின் பின் ஒவ்வொரு ஆண்டும் வளர்ந்து கொண்டே செல்வதாக ஆட்சியாளர்கள் பீற்றிக் கொண்டார்கள்.

பொருளாதார வளர்ச்சி வேலை வாய்ப்பை அதிகரிக்கச் செய்திருக்க வேண்டும். ஆனால், தாராளமயத்தின் பின் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் வளர்ச்சியோ, இருப்பதையும் தட்டிப் பறிக்கிறது. இந்த முரண்பாட்டுக்கு விடை சொல்ல முடியாமல் குழம்பிப் போகிறார்கள், முதலாளித்துவ அறிஞர்கள்.

ஆனால், இது முரண்பாடல்ல; முதலாளித்துவப் பொருளாதாரத்தின் விதியே இதுதான் என்று தனது மூலதனம் நூலில் இப்புதிருக்கு விடையளித்திருக்கிறார், காரல் மார்க்ஸ்.

## முதலாளிகள் கோரும் சுதந்திரம்

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டும் என்றால், மூலதனத்திற்குச் சுதந்திரம் வேண்டும் என்கிறார்கள் முதலாளிகள். சாதாரண மக்களுக்குத் தெரிந்ததெல்லாம் ஆகஸ்டு 15 'சுதந்திரம்' தான்! மூலதனத்திற்குச் சுதந்திரம் என்றால், ''தொழிலாளிக்கு குறைந்தபட்ச கூலி கொடுக்க வேண்டும் என்ற சட்டமெல்லாம் இருக்கக் கூடாது; தேவைப்பட்டால் வேலையில் வைத்துக் கொள்ளவும், இல்லையென்

www.padippakam.com

றால் வேலை நீக்கம் செய்யவும் முதலாளிக்கு உரிமை வேண்டும். அதாவது நவீன பாட்டாளிகளை, நவீனக் கொத்தடிமைகளாக நடத்தும் உரிமையைத்தான் முதலாளிகள் நாசூக்காக, தொழிலாளர் நலச் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும்'' எனக் கோருகிறார்கள். அப்படிச் செய்தால், வேலை வாய்ப்பு பெருகும் என நமது காதில் பூ சுற்றுகிறார்கள்.



**கோயம்புத்தூரிலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தங்களின் பெயரைப் பதிவு செய்து கொள்ள நிற்கும் பெண்கள். காங்கிரசு கொண்டுவந்துள்ள வேலை வாய்ப்பு உத்திரவாதச் சட்டமோ இந்த நகர்ப்புறத்து வேலையில்லா பட்டாளத்தைத் தூர ஒதுக்கி வைத்து விட்டது.**

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டபடி இந்தியாவில் 8 சதவீதத் தொழிலாளர்கள்தான், அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்ட துறைகளில் வேலை பார்ப்பவர்கள். மீதி 92 சதவீத தொழிலாளர்கள் அத்தக் கூலிகள்தான். விவசாயம், கைத்தொழில், வணிக நிறுவனங்கள், சிறு - நடுத்தரத் தொழிற்சாலைகள் போன்ற துறைகளில் வேலை பார்க்கும் இந்த 92 சதவீதத் தொழிலாளர்கள் குறைந்தபட்ச கூலி, பணி பாதுகாப்பு போன்ற சட்டப்பூர்வமான உரிமைகளை எதிர்பார்க்க முடியாது. அதாவது, தாராளமயத்திற்கு முன்பே, முதலாளிகள் கோரும் 'சுதந்திரம்' இந்தியாவில் இருந்தது என்பதே உண்மை நிலை. தாராளமயத்தின் பின்பு தொழிலாளர் நலச் சட்டம் என்பது காகிதத்தில் கூட இருக்கக் கூடாது என அவர்கள் கோருகிறார்கள்.

தொழிலாளர் நலச் சட்டத்தை கழிப்பறை காகிதமாக்கும் நடவடிக்கைகள் ஏற்கெனவே தொடங்கிவிட்டன. இந்தியாவெங்கும் பல இடங்களில் அமைந்துள்ள சிறப்புப் பொருளாதார மையங்களில், தொழிலாளர் நலச் சட்டம் மட்டுமல்ல; இந்திய அரசியல் சாசனச் சட்டம் கூட செல்லாது போலிருக்கிறது. குர்கானில் நடந்தது போன்ற ஒரு தாக்குதல் சம்பவம் ஜப்பானில் நடந்திருந்தால், ஹோண்டா நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கம்பி எண்ணிக் கொண்டிருப்பார்கள் என முதலாளித்துவ பத்திரிகைகளே எழுதும் அளவிற்கு, சிறப்புப் பொருளாதார வளையங்களில் முதலாளிகளுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

''நீண்ட காலமாக வேலை பார்த்து வரும் ஒப்பந்த தொழிலாளர்களின் பணியை நிரந்தரம் செய்ய வேண்டியதில்லை'' என்ற 'சுதந்திரத்தை', உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பின் மூலம் முதலாளிகளுக்கு வழங்கியிருக்கிறது.

100 தொழிலாளர்கள் / ஊழியர்களுக்கு மேல் வேலை பார்க்கும் தொழில் நிறுவனங்கள் ஆட்குறைப்பு செய்ய வேண்டுமானால், முன் அனுமதி பெற வேண்டும் என்ற சட்டத்தை ரத்து செய்து, 1000 பேர் வரை வேலை பார்க்கும் தொழில் நிறுவனங்களில் கூட நினைத்த மாத்திரத்தில் தொழிலாளியை வேலை நீக்கும் செய்யும் உரிமையை மைய அரசு, தொழிலாளர் நலச் சட்டத் திருத்தத்தின் மூலம் முதலாளிகளுக்கு வழங்கியிருக்கிறது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலி கொடுக்கக் கூடத் தேவையில்லை என்ற முன்னுதாரணத்தையும் மைய அரசே ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. சமீபத்தில் நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்திரவாதச் சட்டத்தின் கீழ் வேலைக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்களின் கூலி 60 ரூபாய்தான். இது, பல்வேறு மாநிலங்களில், விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சட்டபூர்வ குறைந்தபட்ச கூலியை விட மிகக் குறைவானது.

இவ்வளவு தூரம் மூலதனத்திற்குச் சுதந்திரம் இருந்தும், முதலாளிகள் எவ்வளவு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள்? 1993-94-க்கும், 1999-2000-க்கும் இடைபட்ட ஏழு ஆண்டுகளில், மிகப் பெரும் நிறுவனங்கள் வெறும் இரண்டு இலட்சம் புதிய வேலை வாய்ப்புகளைத்தான் உருவாக்கியுள்ளன. அதே சமயம், இதே காலகட்டத்தில் ஏழு இலட்சம் ஆலைத் தொழிலாளர்கள் வேலையில் இருந்து துரத்தப்பட்டுள்ளனர். இதேகால கட்டத்தில், சிறு - நடுத்தர தொழில்களையும் உள்ளிட்ட உற்பத்தி சார்ந்த தொழிற்துறை 92 இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கியதாகக் கூறப்பட்டாலும், விவசாயம் நசிந்து வேலையிழந்தவர்களின் எண்ணிக்கையை (2.7 கோடி பேர்) ஒப்பிடும் பொழுது சுண்டைக்காய்தான்.

எவ்வித உரிமைகளும் இன்றி, எவ்வளவு கூலி கொடுத்தாலும் வாங்கிக் கொண்டு உழைக்க மக்கள் தயாராக இருந்தாலும், ''மலிவான கூலி'' மட்டுமே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து விடாது என்பதும்; எவ்வளவுக்கு எவ்வளவு பன்னாட்டு மூலதனமும், உயர் தொழில் நுட்பமும் உள்ளே நுழைகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு வேலையில்லாத் திண்டாட்டம் பல்கிப் பெருகும் என்பதும்தான் இதிலிருந்து நிரூபணமாகிறது.


## ஆளும் கும்பலின் அச்சம்

எனினும், நகர்ப்புறத்தைச் சேர்ந்த படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு சேவைத்துறையும்; கிராமப்புற ஏழை மக்களுக்கு மைய அரசு கொண்டு வந்துள்ள வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டமும் வேலைகளை வழங்கிவிடும் என ஊதிப் பெருக்குகிறார்கள்.

சேவைத்துறையில் வேலை வாய்ப்பு என்றவுடன் தொலைபேசி, ரயில்வே, போக்குவரத்து, மின்சாரம், வங்கி போன்ற சேவைத்துறைகளில்


படிப்பகம்

www.padippakam.com



**மூடிக் கிடக்கும் தொழிற்சாலையைத் திறக்கக் கோரி, கோயம்புத்தூர் நகரில் ஆர்ப்பாட்டம் நடத்திய தொழிலாளர்கள் மீது தடியோடு பாயும் போலீசு. சட்ட விரோதமாகத் தொழிற் சாலைகளை மூடும் முதலாளிகளின் சுதந்திரத்துக்கு அரசு அளிக்கும் பாதுகாப்பு.**

வேலைவாய்ப்பு பெருகப் போவதாகக் கனவு காண வேண்டாம். தனியார் மயம் - தாராளமயத்தால் ஆட் குறைப்பு நடந்து கொண்டிருக்கும் துறைகள் இவை.

இதே போல பட்டப்படிப்பு முடித்த அனைவருக்கும் கணினி மென் பொருள் மற்றும் தகவல் - தொழில்நுட் பத் துறைகளில் வேலை கிடைக்கப் போவதில்லை. கால் சென்டர்கள், மென்பொருள் வளர்ச்சி எனப் பல பிரி வுகளைக் கொண்ட இத்தகவல் தொழில்நுட்பத் துறை அமெரிக்க - ஐரோப்பிய சந்தைகளைச் சார்ந்தே இயங்குகிறது. 2003-ஆம் ஆண்டு நில வரப்படி இத்துறை வெறும் 6.5 இலட் சம் பேருக்குத்தான் வேலை வாய்ப்பை வழங்கியிருக்கிறது. 2015-ஆம் ஆண்டு வாக்கில் தகவல் - தொழில் நுட்பம் சார்ந்த 33 இலட்சம் வேலை வாய்ப்புகள், அமெரிக்காவில் இருந்து ஏழை நாடுகளுக்கு இடம் பெயரும் எனக் கூறப்படுகிறது. 2010-இல் இந்தி யாவில் வேலை தேடி அலையும் மக் கள் தொகை 40 கோடி எனும் பொழுது, இந்த 33 இலட்சம் வேலை வாய்ப்பு களும் இந்தியாவிற்குக் கிடைத்தாலும், அதனால் என்ன பயன் ஏற்பட்டு விடும்?

பங்குச் சந்தை வளர்ச்சியால், ஆலைத் தொழிலாளிக்கும், கிராமத்து விவசாயிக்கும் ஏதாவது நன்மை உண்டா? அதைப் போன்றுதான், இந்தத் தகவல் - தொழில்நுட்பத் துறை வளர்ச்சியால் விவசாயத்திற்கும், உற் பத்தி சார்ந்த உள்நாட்டுத் தொழிற் துறைக்கும் எவ்விதப் பலனும் கிடை யாது. பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் பொது, ''உடலால் இந்தியர்களாகவும், எண்ணத்தால் ஆங்கிலேயர்களாக வும்'' இருக்கும் ஒரு புதிய படித்த நடுத் தர வர்க்கம் உருவாக்கப்பட்டதைப் போல, இந்தத் தகவல் தொழில்நுட்பத் துறை ''உடலால் இந்தியர்களாகவும், எண்ணத்தால் அமெரிக்கர்களாகவும்'' இருக்கும் அமெரிக்க மோகம் கொண்ட புதுப் பணக்கார கும்பலைத்தான் உருவாக்கிவிட்டுள்ளது.

மைய அரசு அறிவித்துள்ள ''தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தர வாதச் சட்டம்'' கிராமப்புற மக்களை ஏய்க்க வந்துள்ள இன்னுமொரு மோசடி. மைய அரசால் தேர்ந்தெடுக் கப்படும் 200 மாவட்டங்களில் மட்டும் தான் இச்சட்டத்தை நடைமுறைப்படுத் தப் போகிறார்கள். இந்த 200 மாவட் டங்களில், ஏற்கெனவே வேலைக்கு உணவு திட்டம் நடைமுறைப்படுத்தப் படும் 150 மாவட்டங்களில், அத்திட் டத்தை ஒதுக்கி வைத்து விட்டு, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப் போகிறார்கள்.

இந்த 200 மாவட்டங்களைச் சேர்ந்த நகர்ப்புறங்களில் வாழும் வேலையில்லாத பட்டாளம் இச்சட்டத் தின்படி வேலை கோர முடியாது. இந்த 200 மாவட்டங்களைச் சேர்ந்த கிராமப் புறங்களில் வாழும் வேலையில்லாத வர்கள் அனைவருக்கும் இச்சட்டத் தின்படி வேலை கிடைக்கும் என்பதற் கும் எந்த உத்தரவாதமும் கிடையாது. அதனால்தான், இச்சட்டத்தின்படி வேலை கிடைக்காதவர்களுக்கு ''உத வித் தொகை'' வழங்கப்படும் என்ற ஒரு ஓட்டையை சட்டத்திலேயே உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

இச்சட்டத்தின்படி, வருடத்தில் 100 நாட்களுக்கு மட்டும்தான் வேலை கிடைக்கும். மீதி 265 நாட்களுக்கு வயிற்றில் ஈரத்துணியைக் கட்டிக் கொள்வதா என்பதை இச்சட்டத்தை இயற்றியவர்களிடம்தான் கேட்க வேண்டும். மேலும், 100 நாட் களுக்கு கண்டிப்பாக வேலை கிடைக் கும் என்பதற்கும் எந்த உத்தரவாத மும் கிடையாது. மைய அரசு நினைத் தால், ஏதாவதொரு நொண்டி சாக் கைச் சொல்லி, இத்திட்டத்தைப் பாதி யிலேயே நிறுத்தி விடலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, வேலை செய்பவர்களுக்குச் சட்டப்ப டியான குறைந்தபட்ச கூலி தரவேண் டும் என்ற அடிப்படை உரிமையையே இச்சட்டம் செல்லாக் காசாக்கி விட்டது. உண்மை இப்படியிருக்க, போலி கம்யூ னிஸ்டுகள் உள்ளிட்டு அனைத்து ஓட்டுக் கட்சிகளும், வேலைக்கான உரி மையை, இச்சட்டம் அடிப்படை உரிமை ஆக்கிவிட்டதைப் போல புகழ்ந்து தள்ளி பித்தலாட்டம் செய்கின்றன.

தனியார்மயம் - தாராளமயத்தால் விவசாயம் நாசமாக்கப்பட்டு, அரைப் பட்டினி நிலைமைக்குத் தள்ளப் பட்டுள்ள கிராமப்புற விவசாயிகள், கலகத்தில் இறங்கி விடுவார்களோ என அஞ்சி நடுங்குகிறது, இந்திய ஆளும் கும்பல். அதனால்தான், அவர்களின் கோபத்திற்கு வடிகால் வெட்டும் வித மாக இம்மோசடி சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

''அனைவருக்கும் வேலை வழங்க முடியாது; வேலை செய்பவனுக்கும் குறைந்தபட்ச கூலி தர முடியாது'' என் பதை இச்சட்டத்தின் மூலம் ஆளுங்கும் பல் மறைமுகமாக ஒப்புக் கொண் டுள்ளது. இனி, வேலை தேடி அலை யும் பட்டாளம் என்ன செய்யப் போகி றது என்பதுதான் கேள்வி. வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம் என வாழப் போகிறோமா? இல்லை, ஆளும் வர்க்கம் அஞ்சுவதைப் போல, மறுகாலனியாக்கத்திற்கு எதிராகக் கல கத்தில் இறங்கப் போகிறோமா?

• ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com

தலையங்கம் தொடர்ச்சி

தொடங்கி நடத்தப்படுவதில்லை. இந்திய சமூக அமைப்பில்தான் இயங்கி வருகின்றன. இங்கே சமூக ரீதியாகவும், சாதி-மத ரீதியாகவும் அனைத்து உரிமைகளும் மறுத்து ஒடுக்கப்பட்ட மக்களே பெரும்பான்மையாக வாழுகின்றனர். 'ஜனநாயக நாடு' என்று சொல்லிக் கொண்டு பெரும்பான்மை மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை தர மறுப்பது எந்தவகையில் நீதியானது? இரண்டாவதாக, சுயநிதிக் கல்லூரிகளுக்கு அரசு நிதியுதவி செய்யாததால், அது தனது இட ஒதுக்கீட்டுக் கொள்கையை இவற்றின் மீது திணிக்கக் கூடாது என்று உச்சநீதி மன்றம் வாதாடியிருக்கிறது. சுயநிதிக் கல்லூரிகளுக்கு அரசு நேரடி நிதி உதவி செய்வதில்லை என்றாலும், அவை கட்டப்பட்டிருக்கும் இடங்கள் பெரும்பாலும் அரசு புறம்போக்குகள் என்பதிலிருந்து, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடைய சலுகைகளை ஒவ்வொரு கல்வி நிறுவனங்களும் பெறுகின்றன.



கல்வி வியாபாரிகளுக்கு ஆதரவாக வழங்கப்பட்ட தீர்ப்பைக் கண்டித்து, கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீக்குளிக்க முயன்ற பொழுது, கைது செய்யப்பட்ட மாணவர்கள் பன்னீர் செல்வம் மற்றும் சதீஷ்குமார்.

இந்தத் தனியார் - சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் தரம் வாய்ந்த சிறந்த கல்வி வழங்குவதாக உச்சநீதி மன்றம் நற்சான்று வேறு வழங்கியிருக்கிறது. தகுதியான வகுப்பறைகள் கூட இல்லாமல் சிமெண்டு அட்டை மற்றும் கீற்றுக் கொட்டகைகளை வைத்தும், கழிப்பறை, விளையாட்டு மைதானம் முதல் நூலகம், அறிவியல் ஆய்வுக் கூடங்கள் வரை எதுவும் இல்லாமலும் இக்கல்வி நிறுவனங்கள் நடத்தப்படுவதாக தொழில் கல்விக் கழகங்கள் சாடி, தகுதிச் சான்றிதழ்கள் பறிக்கப்படுகின்றன அல்லது பலமுறை எச்சரிக்கப்படுகின்றன. அற்ப ஊதியம் கொடுத்து கொத்தடிமைகளை, துறைகுகுப் பொருத்தமில்லாத - தகுதியற்ற ஆசிரியர்களை வைத்து வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தேர்வுகளிலும் பல்வேறு மோசடிகள் - தில்லுமுல்லுகள் செய்கிறார்கள். இதனாலும், அதீத கட்டணம் - நன்கொடை காரணமாகவும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள் உட்பட சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இடம் கிடைத்தும் மாணவர்கள் சேர மறுத்து விடுகிறார்கள்; ஆயிரக்கணக்கான 'சீட்டுகள்' காலியாகக் கிடக்கின்றன.

நடப்பு நிலைமைகள் குறித்து அறிவே இல்லாத கருத்துக் குருடர்களாக உள்ளவர்கள் அல்லது கல்வித் துறை பெருமுதலாளிகளின் கூட்டுக் கொள்ளையர்கள் மட்டுமே சிந்திக்கக் கூடிய வகையில் அவர்களுக்கு சில பரிந்துரைகளை உச்சநீதி மன்றம் வழங்கியிருக்கிறது. மாணவர் சேர்க்கையில் நியாயமான, வெளிப்படையான, சுரண்டலற்ற வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்கிறது. சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் என்றாலே அநியாய வழிமுறைகள், இரகசிய - நிழல் நடவடிக்கைகள், வரைமுறையற்ற சுரண்டல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவை என்பது நாடறிந்த உண்மை. தகுந்த உரிமம் இல்லாமலேயே, அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட கூடுதலாக மாணவர்கள் சேர்க்கப்படுவதும், தேர்வு எழுத முடியாமல் அவர்கள் தெருவில் அலைவதும் திரும்பத் திரும்ப நடக்கின்றன. மேல்நிலைப் பள்ளித் தேர்வு முடிந்த மறுநாளே, தேர்வு முடிவும் மதிப்பெண் பட்டியலும் வழங்கப்படுவதற்கு முன்பேயும், மேல்நிலைப் பள்ளி தேர்வில் தோல்வியடைந்த, தகுதி மதிப்பெண் பெறாத மாணவர்களையும் கூட இரகசியமாகவும் போலி சான்றிதழ்களை வைத்தும் சேர்த்துக் கொள்கிறார்கள்.

சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் சுரண்டுவதாகக் கூறுவதே பொருத்தமற்றதாகும்; அவை வழிப்பறி செய்யும். பகற்கொள்ளையடிக்கும் முகமூடித் திருடர்களால் நடத்தப்படுகின்றன. சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவம் விற்பதில் தொடங்கி படிப்பு முடிந்து சான்றிதழ் பெறுவது வரை எத்தனையோ வகையில் பணம் பிடுங்குகிறார்கள். இவற்றில் நன்கொடையும் கல்விக் கட்டணமும் தெட்டத் தெளிவானது. கொள்ளை இல்லையென்றால், கீற்றுக் கொட்டகையில் தொடங்கப்பட்ட ஒரு சுயநிதிக் கல்வி நிறுவனத்தை வைத்து நிகர்நிலைப் பல்கலைக்கழகம் வரை பல பத்து கல்லூரிகளாக விரிவுபடுத்தி கொள்ளும் அளவு கள்ளச் சாராய வியாபாரிகள் கூட ''கல்வித் தந்தைகளாக'' வளர்ந்தது எப்படி?

சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் வைத்து நடத்துவது சமூக சேவைக்கான தன்னார்வச் செயல் அல்ல. ஓட்டுக் கட்சி அரசியலைப் போலவே கோடி கோடியாகப் பணம் கொழிக்கும் தொழில்தான்; வேண்டுமானால் ''சேவைத் தொழில்'' என்று கூறிக் கொள்ளலாம்! எனவேதான், அரசியல் கிரிமினல்கள், கள்ளப் பணம், கள்ளச் சந்தை, கருப்புப் பண முதலைகள் அதிகரித்த அளவில் இத்தொழிலில் குதிக்கின்றனர். சுயநிதிக் கல்லூரிகள் வைத்து நடத்தும் முன்னாள் - இன்னாள் ஓட்டுக் கட்சிப் பிரமுகர்கள் முக்கிய ஆளும் கட்சிகள் அனைத்திலும் உள்ளனர். தி.மு.க.வின் மைய அமைச்சர்களான டி.ஆர்.பாலு, ரகுபதி, அ.தி.மு.க.வின் ஜெயலலிதா -

**நடப்பு நிலைமைகள் குறித்து அறிவே இல்லாத கருத்துக் குருடர்களாக உள்ளவர்கள் அல்லது கல்வித்துறை பெருமுதலாளிகளின் கூட்டுக் கொள்ளையர்கள் மட்டுமே சிந்திக்கக் கூடிய வகையில் தனியார் கல்லூரிகளுக்குச் சில பரிந்துரைகளை உச்சநீதி மன்றம் வழங்கியிருக்கிறது.**


படிப்பகம்

www.padippakam.com

சசிகலா பினாமிகள், உறவினர்கள், காங்கிரசு எம்.பி.கள் தங்கபாலு, ஜெயமோகன், வி.தண்டாயுதபாணி, எம்.எல்.ஏ.யசோதா, எம்.ஜி.ஆரின் செல்லப்பிள்ளைகளான தம்பித்துரை, ஜேப்பியார், ஜெகத்ரட்சகன், ஏ.சி.சண்முகம், ஜி.விசுவநாதன் என்று இப்படிப் பட்டவர்களின் பட்டியல் நீளமானது. இவர்கள் போதாதென்று ரஜினிகாந்த், விஜயகாந்த் போன்ற நடிகர்கள், சங்கர மடம், மேல்மருவத்தூர் பீடம் ஆகியவையும் சுயநிதிக் கல்வி நிறுவனங்களைத் திறந்துள்ளனர். தம்பித்துரை, நடராஜன் - சசிகலா, மாயாவதியின் சீடர் தேவநாதன் போன்றவர்கள் உ.பி., டெல்லி, அரியானாவில் கூட சுயநிதிக் கல்வி நிறுவனங்களை நடத்துகின்றனர். இந்தப் பட்டியல் விவரங்களே போதும், சமூக சேவைக்காக இவர்கள் கல்வி நிறுவனங்களை நடத்தவில்லை என்பதை நிரூபிக்கின்றன.

இருந்தாலும், ஓட்டுச்சீட்டு அரசியல் நோக்கில் இருந்து பெரும்பாலான கட்சிகளின் தலைமை, உச்சநீதி மன்றத் தீர்ப்பை எதிர்க்கின்றன. தேவையான சட்டத்திருத்தம் கொண்டு வந்து உச்ச நீதி மன்றத் தீர்ப்பைச் செயலிழக்கச் செய்யும் - செல்லுபடியாகாததாக்கும் வகையில் சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீட்டைப் பாதுகாப்பது என்றும் அவை முடிவு செய்துள்ளன. இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும், கிறித்தவர்களாக மதம் மாறிய 'தலித்'துகளுக்காக இடஒதுக்கீடு கோரும் வழக்கின் விசாரணையில் குறுக்கிட்ட உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி ஆத்திரம் கொண்டு வெடித்திருக்கிறார். தமது தீர்ப்பைப் புரிந்து கொள்ளாத அரசியல்வாதிகள் உச்சநீதி மன்றத்தை விமர்சிப்பதை சகிப்புத் தன்மையற்ற செயல் என்றும், வேண்டுமானால் வழக்கு மன்றங்களை மூடிவிடலாம் என்றுகூறி ஆத்திரப்பட்டிருக்கிறார். ஒரு வாதப்படி பார்த்தால் கூட, சம்பளத்துக்கு வேலைசெய்யும் வெறும் அதிகாரியாகிய நீதிபதிகள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகளை விட எந்தவகையிலும் மேலானவர்களாக வைக்க முடியாது; கூடாது. எவ்வாறாயினும் சரி, உச்சநீதி மன்றத்தின் இந்தப் போக்கு, சுயநிதிக் கல்லூரிகளில் இடஒதுக்கீடு என்பதோடு நிற்காது; தனியார்துறைத் தொழில் நிறுவனங்களில் இடஒதுக்கீடு கோருவதை அடியோடு நிராகரிப்பது என்பதில் இருந்து நாட்டின் தரகு பெரும் முதலாளிகள் மற்றும் பன்னாட்டு தொழில் நிறுவனங்களின் பாசிச ஏகபோக ஆதிக்கத்தை சட்டப்பூர்வமான அடிப்படை உரிமையாக அளிப்பதாகவும் நீளும்!

## சில்லறை வியாபாரத்தில் அந்நிய முதலீடு

# சிறு வியாபாரிகளை ஒழிக்கும் சிலந்தி வலை

உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளையின்படி, சிறு-நடுத்தர வியாபாரிகள் மீது மதிப்புக் கூடுதல் வரி என்ற தாக்குதலைத் தொடுத்துள்ள மைய அரசு, இப்பொழுது, சில்லறை வியாபாரத்தில் அந்நிய பன்னாட்டு நிறுவனங்கள் நேரடியாக நுழைவதற்கு அனுமதியளிக்கத் திட்டம் போட்டு வருகிறது. "சூப்பர் மார்க்கெட்" கடைகளைத் திறந்து நடத்தி வரும் டாடா போன்ற தரகு முதலாளிகள், இதற்கான அனுமதியை உடனே அளிக்குமாறு அரசை நிர்ப்பந்தித்து வருகிறார்கள். அமெரிக்கா, கனடா, சீனா உள்ளிட்டு உலகின் 12 நாடுகளில் 4,806 "சூப்பர் மார்க்கெட்" கடைகளை நடத்திவரும் அமெரிக்காவின் தேசங்கடந்த நிறுவனமான "வால்-மார்ட்" இன் அதிபர், இதற்காக பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து விட்டுச் சென்றிருக்கிறார். சமீபத்தில் பிரதமர் மன்மோகன் சிங் அமெரிக்கா சென்ற பொழுது, இது தொடர்பாகப் பேச்சு வார்த்தையும் நடந்திருக்கிறது.

இச்சில்லறை வியாபார பன்னாட்டு நிறுவனங்களுக்கு, 49 சதவீத மூலதனம் போட அனுமதியளிப்பதா அல்லது 26 சதவீத மூலதனம் போட அனுமதியளிப்பதா என்ற "பிரச்சினை" முடிவுக்கு வந்துவிட்டால், அமெரிக்காவின் "வால் மார்ட்", இங்கிலாந்தின் "டெஸ்கோ", ஜெர்மனியின் "மெட்ரோ" போன்ற அந்நிய நிறுவனங்கள், டாடா, அம்பானி போன்ற தரகு முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து, இந்தியாவிலும் தங்கள் "பல சரக்கு"க் கடைகளைத் திறந்து விடுவார்கள்.

சில்லறை வியாபாரத்தில் அந்நிய மூலதனம் நுழைவதற்கு அனுமதியளித்தால், "முதலீடு பெருகும்; வேலை வாய்ப்பு பெருகும்" எனப் பழைய பல்லவியைப் பாடி, இச்சீர்திருத்தத்தை நியாயப்படுத்துகிறார், பிரதமர் மன்மோகன் சிங்.

சில்லறை வியாபாரத்தில் அந்நிய நிறுவனங்கள் நுழைந்தால், பொருட்கள் தர்மாகவும், விலை மலிவாகவும் கிடைக்கும். இதனால் நுகர்வோர் இலாபம் அடைவார்கள் எனத் தாராளமயத்தின் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள்.

நிதியமைச்சர் ப.சிதம்பரமோ இன்னும் ஒருபடி மேலே போய், "உற்பத்தியாளரிடமிருந்து நுகர்வோருக்குப் பொருட்களைக் கொண்டு செல்வதில், பன்னாட்டு நிறுவனங்கள் திறமையாகச் செயல்படும்" என்கிறார்.

அணுகுண்டு வெடிக்கும் அளவிற்குத் திறமை வாய்ந்த நாடு; வல்லரசாகும் அளவிற்குத் தகுதி வாய்ந்த நாடு என இந்திய 'தேச'பக்தியை ஊட்டும் இவர்கள், ஒரு சாதாரண கடை நடத்தும் திறமை இந்தியாவிடம் இல்லை எனக் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய அளவிற்கு, நம்ம ஊர் "அண்ணாச்சிகள்" வியாபாரத் திறமையும், நுணுக்கமும் தெரியாதவர்களா என்ன?

•••

இந்தியாவெங்கும் ஏறத்தாழ ஒரு கோடியே பத்து இலட்சம் வர்த்தக நிறுவனங்கள் இருக்கலாம் என மதிப்பிடப் பட்டுள்ளது. இவற்றுள் 2 சதவீத வியாபாரிகள்தான் "சரவணா ஸ்டோர்ஸ்" போன்று மிகப் பெரும் வர்த்தக நிறுவனங்களை நடத்துகிறார்கள். டாடா நடத்தும் "வெஸ்ட் சைட்", பேண்டலூன் நடத்தும் "பிக் பஜார்", மற்றும் ஃபுட் வேர்ல்ட், சுபிக்ஷா போன்ற "சூப்பர் மார்க்கெட்" கடைகளும் இந்த 2 சதவீதத்துக்குள்தான் அடங்குகின்றன.

இந்தியாவிலுள்ள 4 சதவீதக் கடைகள்தான் 500 சதுர அடி பரப்பளவில் வியாபாரம் நடத்தும் பெரிய கடைகள். மீதமுள்ளவை அனைத்தும் பெட்டிக் கடை அளவில் இருக்கும் மளிகைக் கடைகள், காய்கறிக் கடைகள், ஜெனரல் ஸ்டோர்ஸ், புரோட்டா ஸ்டால், தேநீர் விடுதிகள், மருந்துக் கடைகள், தள்ளுவண்டி அல்லது தரைக்கடைகள் போன்ற பல தரப்பட்ட "வணிக நிறுவனங்கள்" தான். இந்திய அரசின் மதிப்பீட்டின்படியே, இந்தியாவில் உள்ள 98 சதவீதக் கடைகள், விற்பனை வரி, வருமான வரிச் சட்டங்களின் கீழ் வராதவை.

www.padippakam.com



சில்லறை வியாபாரத்தை அந்நிய நிறுவனங்களுக்குத் திறந்துவிடுவது தொடர்பாக, ''வால்மார்ட்'' நிறுவனத்தின் அதிபர் ஜான்பி.மென்ஸெருக்கும் (இடமிருந்து மூன்றாவது) பிரதமர் மன்மோகன் சிங்குக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தை.

தரகு முதலாளிகள் சங்கம் (எஃப்.ஐ.சி.சி.ஐ.) 2003-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இந்தியாவில் சில்லறை வியாபாரத்தின் மதிப்பு ஏறத்தாழ 11 இலட்சம் கோடி ரூபாய். இதில் சூப்பர் மார்க்கெட்டுகள், மிகப் பெரும் வர்த்தக நிறுவனங்களின் பங்கு ஏறத்தாழ 35,000 கோடி ரூபாய். சில்லறை வியாபாரம் ஏறத்தாழ 4 கோடி பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு வழங்கியிருக்கிறது. இதில் சூப்பர் மார்க்கெட்டுகளின் பங்கு ஐந்து இலட்சம் தான்.

•••

1999-ஆம் ஆண்டு வாக்கில் சில்லறை வியாபாரத்தில் ஒரு சதவீதமாக இருந்த சூப்பர் மார்கெட்டுகளின் பங்கு, 2005-இல் 6 சதவீதமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. இது, 2010-இல் 12 சதவீதம் அளவிற்கு வளர்ச்சியடையலாம் எனக் கூறப்படுகிறது. சூப்பர் மார்க்கெட்டுகளிலும், பெரிய வணிக நிறுவனங்களிலும் பொருளை வாங்கும் இந்தியர்களின் எண்ணிக்கை 35 சதவீதம் என்றும், மீதி 65 சதவீதம் பேர் தான் (அடித்தட்டு மக்கள்) தங்களின் வீட்டுக்கு அருகிலுள்ள ''அண்ணாச்சி'' கடைகளில் பொருட்களை வாங்குகிறார்கள் என்றும் ஒரு புள்ளி விவரம் கூறுகிறது.

இந்த 35 சதவீத மேல்தட்டு வாடிக்கையாளர்களை வளைத்துப் பிடிப்பது தான் ''வால் மார்ட்'' போன்ற அந்நிய பகாசுர நிறுவனங்களின் நோக்கமாக இருக்கும் என்றாலும், இதனால் சிறிய கடைகளுக்கு எவ்விதப் பாதிப்பும் இருக்காது என்று கூறி விட முடியாது. ஏனென்றால், இந்தியாவில் சூப்பர் மார்க்கெட் கலாச்சாரம் நுழைந்த பிறகு, பழமையான, சாதாரண கடைகளில் சோப்பு, ஷாம்பு போன்ற நுகர்பொருட்களின் விற்பனை 20 சதவீதம் சரிந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவின் வால் மார்ட்டுக்குச் சொந்தமான ஒரு ''சூப்பர் மார்க்கெட்டின்'' சராசரி பரப்பளவு 85,000 சதுர அடி. குண்டூசி தொடங்கி நவீனமான கார்கள் வரை - எந்தவிதமான நுகர் பொருளையும், எந்த நாட்டுப் பொருளையும் அந்நிறுவனத்தின் சூப்பர் மார்க்கெட்டில் வாங்க முடியும். அந்நிறுவனத்தின் ஒரு கடையின் ஆண்டு சராசரி விற்பனை 230 கோடி ரூபாய். நம் நாட்டு சூப்பர் மார்க்கெட் நிறுவனங்கள் கூட, வால் - மார்டோடு போட்டி போட முடியாது எனும் பொழுது, சிறிய வியாபாரிகள் தாக்குப் பிடிக்க முடியுமா? பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில், யானையோடு பூனையை மோதச் சொல்கிறது, காங்கிரசு கும்பல்.

''10 இலட்சம் மக்கள் தொகை கொண்ட 35 இந்திய நகரங்களில், வால் - மார்ட் ஒரேயொரு சூப்பர் மார்க்கெட்டைத் திறந்தாலே, 4,32,000 சிறிய கடைகளை இழுத்து மூட வேண்டியிருக்கும்; பன்னாட்டு சில்லறை வியாபார நிறுவனங்கள் இந்தியாவில் நுழைந்து 20 சதவீத வியாபாரத்தைக் கைப்பற்றினால், சிறிய கடைகளில் வேலை பார்க்கும் 80 இலட்சம் சிப்பந்திகளுக்கு வேலை பறிபோகும்'' என இச்சீர்திருத்தத்தின் பின்னுள்ள அபாயகரமான விளைவுகளை வெளியிட்டிருக்கிறது, ''எக்கனாமிக் அண்ட் பொலிடிகல் வீக்லி'' என்ற ஆங்கில இதழ்.

பன்னாட்டு சில்லறை வியாபார நிறுவனங்கள் நமது நாட்டில் சில்லறை வியாபாரத்தில்தான் தற்பொழுது நுழைய முடியாதே தவிர, சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்யும் மொத்த வியாபாரத்தில் நுழைய முடியும். இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு பெங்களூர் நகரில் கடையைத் திறந்த ஜெர்மன் நாட்டு நிறுவனமான ''மெட்ரோ'', சட்ட விரோதமான முறையில் சில்லறை வியாபாரத்தையும் நடத்தத் தொடங்கியது. இதனால் பாதிக்கப்பட்ட பெங்களூர் நகர வியாபாரிகள் ''மெட்ரோ''வுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் குதித்த பிறகுதான், சில்லறை வியாபாரத்தை நிறுத்திக் கொள்வதாக அறிவித்தது, மெட்ரோ. ''சென்னையில், தி.நகர் - ரங்கநாதன் தெருவில் உள்ள கடைகளை ஒழிப்பதற்கு ஒரேயொரு மெட்ரோ நிறுவனம் போதும்'' என்கிறார், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர், வெள்ளையன்.

•••

இந்தியாவில் சில்லறை வியாபாரம் நாடெங்கும் பரந்து விரிந்த அளவில் சிதறுண்டு கிடப்பதால், பன்னாட்டு சில்லறை வியாபார நிறுவனங்களின் வருகையால் பாதிப்பு பெரிய அளவில் இருக்காது என்று சிலர் வாதாடுகிறார்கள்.

கோக், பெப்சி என்ற இரு அமெரிக்காவின் தேசங் கடந்த குளிர்பான நிறுவனங்கள். ''காளிமார்க்'', வின்சென்ட் போன்ற பெரிய குளிர்பான நிறுவனங்களை மட்டுமின்றி, உள்ளூர் கோலி சோடா கம்பெனிகளையும் போண்டியாக்கவில்லையா?

அரசாங்கத்தின் தாராள இறக்குமதிக் கொள்கை, நாடெங்கிலும் பல்லாயிரக்கணக்கான சிறுதொழில் நிறுவனங்களை இழுத்து மூட வைக்கவில்லையா?

கிராமச் சந்தையைக் கைப்பற்றி குடிசைத் தொழில்களை அழித்துவிடும் நோக்கில் இந்துஸ்தான் லீவர், கோத்ரெஜ் போன்ற பெரிய நிறுவனங்கள் வியாபார உத்தியை மாற்றிக் கொள்ளவில்லையா?

சிறிய, நடுத்தர விவசாயிகளை, அவர்களது நிலத்தை வாங்காமலேயே, அவர்களைத் தங்களின் ஒப்பந்த விவசாயிகளாகப் பன்னாட்டு நிறுவனங்கள் மாற்றவில்லையா?

இந்த சமீபத்திய வரலாற்றை நினைவில் வைத்துக் கொண்டால், உள்ளூர் சில்லறை வியாபாரிகள் எத்தகைய அபாயத்தை எதிர்நோக்கி இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.


படிப்பகம்

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ''டெஸ்கோ'' என்ற சில்லறை வியாபார நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் பால் எட்கர்ட், ''உங்கள் நாட்டு வியாபாரக் கலாச்சாரம் எதுவாக இருந்தாலும், அதையெல்லாம் பன்னாட்டு நிறுவனங்கள் சமாளித்து விடும். அதனால், உங்கள் அரசாங்கத்தை அந்நிய முதலீடு தொடர்பான விதிகளைத் தளர்த்தாமல் இருக்குமாறு நிர்ப்பந்தம் கொடுங்கள்'' என வெளிப்படையாகவே எச்சரித்திருக்கிறார்.

•••

இந்தியாவில் தற்பொழுது நிலவும் வேலை வாய்ப்பற்ற சூழலில், சில்லறை வியாபாரம் சுய வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் தருவதில் முக்கியமான பங்காற்றி வருகிறது. கொஞ்சம் மூலதனம், கொஞ்சம் கணக்கு வழக்குப் பார்க்கும் திறமை இருந்தால், படித்தவன்/படிக்காதவன் என யாராக இருந்தாலும் ஒரு சிறிய மளிகைக் கடையைத் தொடங்கி, வாழ்க்கையை ஓட்டிவிட முடியும்; 15 மணி நேரம் உழைப்பதற்கு தெம்பு இருந்தால், ஒரு புரோட்டா ஸ்டாலிலோ, டீ கடையிலோ வேலைக்குச் சேர்ந்து விட முடியும். ''சேவைத் துறையில் வேலை வாய்ப்பு'' என அரசாங்கம் பெரிதாக விளம்பரப்படுத்துகிறதே, அது இந்த மாதிரியான வேலைகள் தானே தவிர, கணினி முன் உட்காரும் ''வெள்ளை சட்டை'' வேலையல்ல!

இந்தியாவில் தற்பொழுதுள்ள மொத்த வேலை வாய்ப்பில் 7 முதல் 8 சதவீத வேலை வாய்ப்பை சில்லறை வியாபாரத் துறை தான் கொடுத்திருக்கிறது. விவசாயத்திற்கு அடுத்து, சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் மிகப் பெரும் துறையாக சில்லறை வியாபாரம் இருப்பதை அரசாங்கமே ஒத்துக் கொள்கிறது. இப்படிப்பட்ட துறையில் பன்னாட்டு சில்லறை வியாபார நிறுவனங்களை நுழைய விடுவதை, 4 கோடி குடும்பங்களின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட பிரச்சினையாகத் தான் பார்க்க வேண்டுமே தவிர, வெறும், பொருளாதாரப் பிரச்சினையாக மட்டும் பார்க்க முடியாது.

''வால் - மார்ட்'' போன்ற பன்னாட்டு நிறுவனங்கள், தனது போட்டியாளர்களை ஒழித்துக் கட்டுவதற்காக, பொருட்களை சிறிய வியாபாரிகளை விட மலிவாக விற்பது என்ற வியாபார தந்திரத்தில் கண்டிப்பாக இறங்குவார்கள். உள்நாட்டு சூப்பர் மார்க்கெட் நிறுவனங்கள் இந்த தந்திரத்தைக் கடைப்பிடித்துத்தான், சில்லறை வியாபாரத்தில் 6 சதவீதப் பங்கைக் கைப்பற்றி இருக்கிறார்கள். இந்த நாணயமற்ற உத்தியைத் தான் ப.சிதம்பரம் கும்பல் ''வியாபாரத் திறமை'' என மெச்சிக் கொள்கிறது.

இந்தக் கழுத்தறுப்பு போட்டியால் ஏற்படும் ''நட்டத்தை'', வால்-மார்ட் போன்ற பன்னாட்டு நிறுவனங்களால் பல ஆண்டுகளுக்குக் கூடத் தாங்கிக் கொள்ள முடியும். ஏற்கெனவே சூப்பர் மார்க்கெட் கடைகளை நடத்தி வரும் டாடா போன்ற பெரிய முதலாளிகள், பன்னாட்டு நிறுவனங்களோடு வியாபாரக் கூட்டணி சேர்ந்து தப்பித்துக் கொள்வார்கள். ஆனால், எத்தனை சிறிய வியாபாரிகளால் வியாபாரம் சரிந்து கொண்டே போவதைத் தாங்கிக் கொள்ள முடியும்?

மாற்று வேலை வாய்ப்பு எதுவும் கிடைக்க வாய்ப்பில்லாத இச்சூழலில், ஒரு சிறிய கடை மூடப்பட்டால், அதை நம்பிப் பிழைக்கும் ஒரு குடும்பமோ, இரண்டு குடும்பமோ நடுத்தெருவில் நிற்க வேண்டியதுதான். தமிழகத்தைப் பொருத்தவரையில் இப்பொருளாதார சீர்திருத்தம், நாடார் சாதியைச் சேர்ந்த பெரும்பான்மையான வியாபாரிகளை, வணிக நிறுவனச் சிப்பந்திகளைத் திக்கற்றவர்களாக ஆக்கி விடும் எனக் கண்டிப்பாகச் சொல்லலாம்.

வால்-மார்ட் போன்ற பன்னாட்டு சில்லறை வியாபார நிறுவனங்கள், உள்நாட்டில் தயாராகும் பொருட்களைத் தான் வாங்கி விற்பனை செய்யும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. எந்த நாட்டில் பொருட்கள் மலிவாகக் கிடைக்கிறதோ, அங்கிருந்து இறக்குமதி செய்து, அவை விற்பனை செய்வதை இந்திய அரசு கூடத் தடுத்து விட முடியாது. ஏற்கெனவே, தாராள இறக்குமதியால் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் உள்நாட்டு சிறு தொழில் நிறுவனங்களுக்கு, இந்தப் புதிய சீர்திருத்தம் இன்னும் ஒரு மரண அடியாகவே இருக்கும்.

இது மட்டுமின்றி, இச்சீர்திருத்தத்தின் ஆதரவாளர்கள், அத்தியாவசிய உணவுப் பொருள் சட்டத்தையும் நீக்க வேண்டும் என்றும் கோருகிறார்கள். இச்சட்டம் இருக்கும் பொழுதே, அரிசி, கோதுமை, பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை உள்நாட்டு வர்த்தகச் சூதாடிகள்தான் தீர்மானிக்கிறார்கள். இச்சட்டம் நீக்கப்பட்டால், இந்த ''அதிகாரம்'' வால்-மார்ட் போன்ற பன்னாட்டு வியாபாரிகளின் கைகளுக்குப் போய் விடும்.

சில்லறை வியாபாரத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைய அனுமதியளித்த சீனா, மலேசியா, தாய்லாந்து போன்ற ஏழை நாடுகள், தற்பொழுது இந்நிறுவனங்களின் பேயாட்டத்தைக் கட்டுப்படுத்த புதிய, புதிய சட்டங்களை இயற்றி வருகின்றன; கடப்பாரையை முழுங்கி விட்டு, அது செரிக்கசுக்குக் கசாயத்தைக் குடிக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்தில், ஒரு வேண்டாத விருந்தாளியை, வெற்றிலை பாக்கு வைத்து வரவேற்கத் தயாராகிறது, நயவஞ்சகக் காங்கிரசு கும்பல்!

• செல்வம்

**அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள அடிசன் நகரில் அமைந்துள்ள ''வால்-மார்ட்'' சூப்பர் மார்க்கெட்டின் ஒரு பகுதி: யானையோடு பூனையை மோதவிடுவதுதான் நாணயமான போட்டியா?**



www.padippakam.com

# போஸ்கோ ஒப்பந்தம்:

# தனியாருக்குத் தாரைவார்க்கப்பட்ட ஒரிசா மாநிலம்

இதர மாநிலங்களின் முதல்வர்கள் ஏதேனும் ஒரு தொழிற்துறையை அந்நிய நிறுவனங்களின் கொள்ளைக்காக தாரை வார்த்துக் கொடுக்கிறார்கள் என்றால், ஒரிசா மாநிலத்தையே தென்கொரிய நிறுவனமான ''போஸ்கோ''வுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து புதிய 'சாதனை' படைத்துள்ளார், அம்மாநில முதல்வர் நவீன் பட்நாயக். கடந்த ஜூன் 22-ஆம் தேதியன்று தென்கொரியாவின் தேசங்கடந்த தொழிற்கழகமான போகாங் ஸ்டீல் கம்பெனி எனப்படும் ''போஸ்கோ'' **(POSCO)** நிறுவனத்துடன் ஒரிசா மாநில அரசு செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் மூலம் கனிம வளமும் தாது வளமும் நிறைந்த ஒரிசா மாநிலம் கேள்விமுறையின்றிச் சூறையாடப்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் முழுமையடைந்து விட்டன.

''அரசு செலவில் சாலை - ரயில்வே - துறைமுக வசதிகளைச் செய்து தருகிறோம்; ஜோப்ரா குறுக்கு அணையிலிருந்து மகாநதியின் தண்ணீரைத் தாராளமாகத் தருகிறோம்; பாரதீப் துறைமுகப் பகுதியில் ஆலை அமைக்க 6000 ஏக்கர் நிலம் தருகிறோம்; தலைநகரில் அலுவலகம் அமைத்துக் கொள்ள மையப் பகுதியில் 25 ஏக்கர் நிலத்தை இலவசமாகத் தருகிறோம்; சிறப்பு பொருளாதார வளையம் என்ற பெயரில் வரிச் சலுகையோடு எல்லா சலுகைகளையும் அளிக்கிறோம்; ரூ. 10 லட்சம் கோடி மதிப்புள்ள ஒரிசாவின் இரும்புத் தாது வளத்தைக் கொள்ளையடித்துச் செல்லுங்கள்; எல்லையில்லா நிலக்கரி மூல வளங்களைச் சூறையாடுங்கள்!'' என்று இந்த ஒப்பந்தத்தின் மூலம் பகிரங்கமாக அறிவித்துள்ளது ஒரிசா அரசு.

''பாரதீப்பில் போஸ்கோ நிறுவனம் இரும்பு எஃகு ஆலையை நிறுவும். ஆண்டுக்கு 1.2 கோடி டன் அளவுக்கு எஃகு உற்பத்தி செய்யும். 2010-ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 30 லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்து, 2016-ஆம் ஆண்டில் 1.2 கோடி டன் அளவுக்கு விரிவடையும். இந்த ஆலையானது ரூர்கேலா எஃகு ஆலையை விட மிகப் பிரம்மாண்டமானது. ரூர்கேலா ஆலை ஆண்டுக்கு 14 லட்சம் டன் அளவுக்குத்தான் எஃகு உற்பத்தி செய்கிறது. மிகப் பெரிய போஸ்கோ ஆலை அமைவதால் 13,000 பேருக்கு வேலை கிடைக்கும். வறுமையிலும் பின்தங்கிய நிலையிலும் உள்ள ஒரிசா, இவ்வாலை மூலம் தொழில் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் மாபெரும் சாதனை படைக்கும்'' என்று ஆட்சியாளர்கள், போஸ்கோ நிறுவனத்துடனான ஒப்பந்தம் குறித்து பூரித்துப் போகிறார்கள்.

போஸ்கோ நிறுவனம் எஃகு உற்பத்தி மட்டுமின்றி, நிலக்கரியிலிருந்து மின்சாரமும் உற்பத்தி செய்யும். பிற மாநிலங்கள் ஒரிசாவிலிருந்து நிலக்கரியை விலைக்கு வாங்கி மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. ஆனால், போஸ்கோ நிறுவனம் ஒரிசாவிலிருந்து நிலக்கரியை விலைக்கு வாங்காது. ஏனென்றால், மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக இந்நிறுவனத்துக்கு ஒரிசாவின் நிலக்கரிச் சுரங்கங்கள் இலவசமாக கையளிக்கப்படும். எத்தனை சுரங்கங்கள் இவ்வாறு இலவசமாகத் தரப்படும் என்பது பற்றியோ, எத்தனை காலத்துக்கு இவ்வாறு தரப்படும் என்பது பற்றியோ ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை. இதுவரை எந்த நிலக்கரிச் சுரங்கமும் எந்தவொரு வெளிநாட்டுக் கம்பெனிக்கும் குத்தகைக்குக் கூடத் தரப்பட்டதில்லை. போஸ்கோ ஒப்பந்தம், நிலக்கரி சுரங்கங்களையும் மூலவளங்களையும் தனியார்மயமாக்குவதைத் தொடங்கி வைத்து விட்டது.

இந்த ஒப்பந்தத்தில், போஸ்கோ நிறுவனத்துக்கு 60 கோடி டன் இரும்புத்தாது தேவைப்படும் என்றும்



ஒரிசாவின் இரும்புத் தாது வளத்தை ''போஸ்கோ'' நிறுவனத்திற்கு வாரிக் கொடுக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டு, கை குலுக்கிக் கொள்ளும் ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக் (வலது) மற்றும் ''போஸ்கோ''வின் அதிபர் கு-டாக்-லீ.



படிப்பகம்

அதை அரசு வழங்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 30 சதவீத இரும்புத் தாதுவை ஏற்றுமதி செய்து அதற்கிணையாக உயர்தர தரமான இரும்புத்தாதுவை தென்கொரியாவிலுள்ள தனது ஆலையிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளவும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, 40 கோடி டன் இரும்புத் தாதுவை தனது தென்கொரிய ஆலைக்கு இந்நிறுவனம் ஏற்றுமதி செய்யவும் தாராள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதாவது, மொத்தம் 100 கோடி டன் இரும்புத் தாது வளத்தை அள்ளிச் செல்ல போஸ்கோ நிறுவனத்துக்கு அனுமதி தரப்பட்டுள்ளது.

இதற்கு சல்லிக்காசு கூட போஸ்கோ தரவேண்டியதில்லை என்று ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. ஏனென்றால், ஆலையை நிறுவுவதற்கான வெகுமதியாக (ராயல்டியாக) இந்நிறுவனத்துக்கு இச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. ஒரு டன் இரும்புத் தாதுவின் சந்தை விலை குறைந்தபட்சம் ரூ.2000-மாகவும் அதிகபட்சம் ரூ. 26,000-மாகவும் உள்ளது. குறைந்தபட்ச மதிப்பீட்டின்படி பார்த்தால் கூட, 60 கோடி டன் இரும்புத்தாதுவின் விலை ரூ. 1,20,000 கோடியாகும். ஒரு டன் இரும்புத் தாதுவை வெட்டியெடுக்க ஆகும் சராசரி செலவு ரூ. 400 என்ற அடிப்படையில் 60 கோடி டன்னுக்கான செலவு ரூ. 24,000 கோடியை கழித்து விட்டால், ரூ.96,000 கோடியை போஸ்கோ எவ்விதத் தடையுமின்றி அள்ளிச் செல்லும். இது ஓராண்டுக்கான மதிப்பீடுதான். இந்த வகையில், ஒப்பந்தப்படி போஸ்கோ நிறுவனம் 30 ஆண்டுகளுக்கு அள்ளிச் செல்லும். அதாவது, குறைந்தபட்ச மதிப்பீட்டின்படியே ஏறத்தாழ 28 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள இரும்புத் தாதுவை போஸ்கோ நிறுவனம் சூறையாடும். 30 ஆண்டுகள் நீடிக்கும் இந்த ஒப்பந்தம், அவசியமானால் மேலும் 20 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரும்புத் தாது மட்டுமின்றி குரோமியம், மாங்கனீசு, டோலோமைட், சுண்ணாம்புக்கல் முதலானவற்றை போஸ்கோ நிறுவனத்துக்கு சலுகை விலையில் வழங்கவும் ஒப்பந்தத்தில் முடிவாகியுள்ளது. இவற்றின் மூலம் எவ்வளவு செல்வம் கொள்ளை போகும் என்பது இனிமேல்தான் தெரியவரும்.

இதுதவிர, போஸ்கோ நிறுவனத்துக்கு இன்னும் பல சலுகைகள் தரப்பட்டுள்ளன. போஸ்கோ ஆலைக்கு



**போஸ்கோ ஒப்பந்தத்தை எதிர்த்து ஒரிசா தலைநகர் புவனேசுவரில் எதிர்க்கட்சிகள் நடத்திய ஊர்வலம்: ஊரை ஏய்க்கும் நாடகம்.**

சிறப்புப் பொருளாதார வளையச் சலுகை தர மைய அரசிடம் வலியுறுத்துவதாக ஒரிசா அரசு உறுதியளித்துள்ளது. அத்தகைய சிறப்பு சலுகை வழங்கப்பட்டால், அந்த ஆலைமீது எவ்வித அரசுக் கட்டுப்பாடும் இல்லாமல் போகும். அந்த ஆலை அரசுக்கு வரி செலுத்த வேண்டிய கட்டாயம் கூட இல்லாமல் போகும்.

அடுத்து, பாரதீப்பில் போஸ்கோ நிறுவனம் தனக்கென தனியாக ஒரு துறைமுகம் அமைத்துக் கொள்ள அனுமதி தரப்பட்டுள்ளது. தற்போதைய பாரதீப் துறைமுகத்திலும் இந்த ஆலைக்கென தனியொரு தளம் அமைத்துத் தரப்படும். இதனால் பாரதீப் துறைமுகத்தின் வருவாய் குறையும். சரக்குக் கப்பல்களின் வருகை - தங்கல் மூலம் கிடைக்கும் வருவாய் குறைவதால், அரசு பொறுப்பிலுள்ள அத்துறைமுகம் நலிவடைந்து நட்டப்படும்.

மேலும், இந்த ஒப்பந்தப்படி மைய அரசானது தனது சொந்த செலவில் அரிதாஸ்பூர் - பாரதீப் மற்றும் பன்சாபானல் - பாரதீப் ரயில் பாதையை அமைத்துத் தரவுள்ளது. இரும்புத் தாதுவை, போஸ்கோ நிறுவனம் ஏற்றுமதி செய்வதற்கு வசதியாக அமையும் வகையில் இந்த ரயில் பாதைகள் அமைக்கப்படவுள்ளன. இதுவொருபுறமிருக்க, நிலக்கரி மற்றும் இரும்புத்தாதுச் சுரங்களிலிருந்து போஸ்கோ ஆலை வரை தனி இருப்புப் பாதைகளை அமைத்துக் கொள்ள ஒரிசா அரசு அனைத்து உதவிகளையும் செய்ய உறுதியளித்துள்ளது. இதுவும் போதாதென்று, இந்த ஒப்பந்தத்தை குறையேதுமின்றி நிறைவேற்றவும் கண்காணிக்கவும் முதுநிலை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் குழுவை ஒரிசா மாநில அரசு நிறுவியுள்ளது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, மகாநதியிலிருந்து ஜோப்ரா குறுக்கணை கால்வாய் மூலம் போஸ்கோ நிறுவனத்துக்குத் தண்ணீர் தருவதென ஒப்பந்தத்தில் கையெழுத்தாகியுள்ளது. இலவசமாகத் தரப்படுமா, விற்பனைக்குத் தரப்படுமா என்பது பற்றியோ, எவ்வளவு கோடி லிட்டர் தரப்படும் என்பது பற்றியோ இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படவில்லை. மேலும் குறுக்கணையில் எவ்வளவு கன மீட்டர் தண்ணீர் தேக்கி வைக்கப்படும், அதில் எவ்வளவு தண்ணீரை போஸ்கோ உறிஞ்சும் என்பது பற்றியோ, கோடை காலத்தில் எவ்வளவு தண்ணீர் தரப்படும் என்பது பற்றியோ ஒரிசா அரசு தெளிவாக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஜோப்ரா குறுக்கு அணைக் கால்வாய் மூலம் பாசனவசதி பெற்று வரும் விவசாய நிலங்களின் எதிர்கால உத்திரவாதம் பற்றியும் ஒப்பந்தத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆலை அமையவுள்ள பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வெளியேற்றப்படவுள்ள நிலையில், அம்மக்களுக்கு நிலமும் வேலைவாய்ப்பும் நிவாரணமும் நட்டஈடும் தருவது பற்றியும் ஒப்பந்தத்தில் எதுவுமில்லை. மகாநதியின் குறுக்கே ஹிராகுட் அணை கட்டப்பட்டபோது வெளியேற்றப்பட்ட பல்லாயிரக்கணக்கான பழங்குடியினருக்கு இன்றுவரை நிவாரணமோ நட்டஈடோ தராத ஆட்சியாளர்கள், இப்போது போஸ்கோ ஆலையால் வெளியேற்றப்படும் மக்களுக்கு உரிய நிவாரணம் தருவார்கள் என்று நம்புவதற்கு அடிப்படையே இல்லை.

www.padippakam.com

தனியார்மயம் - தாராளமயத்தின் முதல்கட்ட பொருளாதாரச் சீர்திருத்தத்தின் பெயரால் நாட்டை அடகு வைத்த பா.ஜ.க. ஓநாய்கள், இப்போது "ஐயோ! ஒரிசா கொள்ளை போகிறதே!" என்று ஒப்பாரி வைக்கின்றன. ஆளும் பிஜு ஜனதா தளத்துடன் கூட்டணி கட்டிக் கொண்டு பதவியை அனுபவித்து வரும் பா.ஜ.க.வின் ஒரிசா மாநிலத் தொழிலமைச்சரான பிஸ்வ பூஷண் அரிச்சந்தன், தனக்கு "போஸ்கோ" ஒப்பந்தம் பற்றி இருட்டடிப்பு செய்யப்பட்டு விட்டதாகப் புலம்புகிறார். தேர்தல் நெருங்குவதால், மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களாகக் காட்டிக் கொண்டு "போஸ்கோ" ஒப்பந்தத்தை எதிர்ப்பதாக பா.ஜ.க. நாடகமாடுகிறது.

இதே உத்தியோடுதான் மதச்சார்பற்ற ஜனதாதளம், ஒரிசா கணபரிஷத் ஆகிய கட்சிகளும் "போஸ்கோ" எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துகின்றன. மைய அரசு "போஸ்கோ" ஒப்பந்தத்தை ஆதரித்து செயல்படுத்திவரும் அதேசமயம், மாநில காங்கிரசில் ஒரு பிரிவு, ஒரிசாவின் மூலவளங்கள் சூறையாடப்படுவதாகப் புலம்புகிறது.

ஆனால், இதே ஓட்டுப் பொறுக்கிகள் 2000-வது ஆண்டில் பாக்சைட் சுரங்கத் திட்டத்தால் தமது வாழ்வும் வளமும் பறிக்கப்படுவதை எதிர்த்து பழங்குடியினர் போராடிய போது, அவர்களை மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைத் தடுக்கும் சதிகாரர்கள் என்று அவதூறு செய்தனர். அனைத்து

தொடர்ச்சி 19-ஆம் பக்கம்

# வாழ்வைப் பறித்து முன்னேற்றமா?

ஒரிசா மாநிலம் தாது வளமும் கனிம வளமும் நிறைந்த பூமி. நாட்டின் மூலவளத்தில் இரும்புத்தாது 32.9%, பாக்சைட் 49.95%, செறிவான குரோமியம் 98.4%, நிலக்கரி 24.8%, சுண்ணாம்புக் கல் 28%, அலுமினியத் தாது 52% - என தாது வளமும் கனிம வளமும் செறிந்த பூமி. இம்மூலவளங்களைத் தனியார் முதலாளிகள் சூறையாடுவதற்காகவே, அம்மாநில அரசு இதுநாள்வரையில் தனது மூலவளத்தை முறைப்படுத்தும் கொள்கையோ சுரங்கத் தொழில் கொள்கையோ வகுக்கவில்லை. இம்மூலவளங்களைச் சூறையாடும் தொழிற்சாலைகளால் வெளியேற்றப்படும் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களுக்கு வீடும் நிலமும் நிவாரணமும் வேலைவாய்ப்பும் தருவதற்கான கொள்கையும் இதுவரை வகுக்கப்படவில்லை. பல லட்சக்கணக்கான மக்கள் ஏற்கெனவே இத்தகைய தொழிற்சாலைகளால் வெளியேற்றப்பட்டு வாழ்வுரிமை இழந்து பரிதவிக்கிறார்கள்.

இப்போது மாநிலத்தைத் தொழில்மயமாக்கி முன்னேற்றுவது என்ற பெயரால், அந்நிய தொழிற்கழகங்களின் சூறையாடலுக்கு தாராள அனுமதியளித்து பல லட்சக்கணக்கான மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து வருகிறது, ஒரிசா அரசு. "போஸ்கோ"வின் சூறையாடலுக்கு அனுமதித்திருப்பது மட்டுமின்றி, இதுபோல 37 அன்னியக் கம்பெனிகளுடன் ஒரிசா அரசு ஒப்பந்தம் போட்டுள்ளது. நாட்டின் தற்போதைய மொத்த எஃகு உற்பத்தியை விஞ்சும் வண்ணம் ஒரிசாவில் மட்டும் 4.77 கோடி டன் அளவுக்கு இந்த ஆலைகள் எஃகு உற்பத்தி செய்து குவிக்கும். மாநிலத்தைத் தொழில்மயமாக்குவது என்ற பெயரால் நிறுவப்படும் இந்த ஆலைகளால் லட்சக்கணக்கான மக்கள் தமது சொந்த மண்ணையும் வாழ்வையும் இழந்து வெளியேற்றப்படவுள்ளனர்.

எஃகு ஆலைகள் மட்டுமின்றி அலுமினிய சுத்திகரிப்பு ஆலைகள், பாக்சைட் சுரங்கத் தொழிற்சாலைகள் முதலானவற்றை நிறுவ அம்மாநில அரசு பல்வேறு தனியார் - அந்நிய நிறுவனங்களுடன் அண்மையில் ஒப்பந்தம் போட்டுள்ளது. ஸ்டெர்லைட் நிறுவனத்தின் துணை நிறுவனமான வேதாந்தா அலுமினியம் கம்பெனி பாக்சைட் சுரங்கத் தொழிலிலும், குரோமைட் சுரங்கத் தொழிலில் ஜிண்டால் நிறுவனமும் வந்திறங்கியுள்ளன. நார்வேயின் ஹைட்ரோ அலுமினியம், கனடாவின் அல்கான் முதலான அந்நிய நிறுவனங்கள் பாக்சைட், மாங்கனீசு, டோலோமைட் முதலானவற்றைப் பிரித்தெடுக்கும் சுரங்கத் தொழிலில் நுழைந்துள்ளன.

இத்தொழில் நிறுவனங்கள் அனைத்தும் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினர் வாழும் காலாகந்தி, ரயாகடா, கோரபுட், சுந்தர்கார், கியோன்ஜார், தங்கர்பட்டா முதலான மாவட்டங்களில்தான் குவிந்துள்ளன. இந்த ஆலைகளுக்காக அடுத்தடுத்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கிராமம் கிராமமாக விரட்டியடிக்கப்படுகிறார்கள். வாழ்வுரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து இம்மக்கள் போராடினால், அவர்கள் மீது பொய்வழக்கு, தடியடி, கைது செய்தல் மட்டுமின்றி துப்பாக்கிச் சூடும் நடத்தி அடக்குமுறையை ஏவி வருகிறது ஒரிசா அரசு. கடந்த 2000-வது ஆண்டில் தமது வாழ்வுரிமையைப் பறிக்கும் பாக்சைட் தொழில் திட்டத்தை எதிர்த்து ரயகடா மாவட்டத்தைச் சேர்ந்த பழங்குடியினர் போராடியபோது போலீசார் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு நடத்தி 3 பேரைக் கொன்று 50-க்கும் மேற்பட்டோரைப் படுகாயப் படுத்தினர்.

இத்தகைய அடக்குமுறைகள் ஒருபுறமிருக்க, இந்த ஆலைகளிலிருந்து வெளியேறும் நச்சுக் கழிவுகள் மனித உயிர்களையும் சுற்றுச்சூழலையும் பல பத்தாண்டுகளுக்கு நாசமாக்கிவிடும். ஏற்கெனவே அரசுத் துறை நிறுவனமான "நால்கோ" வெளியேற்றும் அலுமினியச் சாம்பல் கழிவுகளால் அங்குல், தல்சார் வட்டாரங்களில் விவசாய நிலங்கள் நாசமாக்கப்பட்டு விட்டன. அங்கு புல் - பூண்டு கூட முளைக்காமல் விவசாயமும் விவசாயிகளும் முடமாக்கப்பட்டுள்ளனர். ●

ஜிண்டால் ஸ்ட்ரைப்ஸ் என்ற தனியார் நிறுவனம் கண் வைத்துள்ள தெங்கனால் மாவட்டத்தில் குரோமைட் கனிமச் சுரங்கம்.





படிப்பகம்

# வாசகர் கடிதம்

❍ எங்கள் பகுதியில் பு.ஜ. இதழைப் பிரச்சாரம் செய்து நாங்கள் விற்பனை செய்து கொண்டிருந்த போது, ஒரு பாமர விவசாயி, பு.ஜ. இதழின் அட்டைப்படத்தைப் பார்த்து பக்தியோடு கும்பிட்டு, இந்த அனுமார் சாமி புத்தகத்தை எனக்கும் கொடுங்கள் என்று கேட்டார். இது சாமி இல்லை; கொத்தடிமை ஆசாமி என்று நாங்கள் அவரிடம் விவரமாக விளக்கிக் கொண்டிருந்ததைக் கேட்டு, அங்கு 10-20 பேர் கூடிவிட, அதுவே ஒரு தெருமுனைக் கூட்டம் போல அமைந்து மக்களிடம் பிரச்சாரம் செய்ய உதவியது. அமெரிக்க அடிமை 'அணு' மன்மோகன் சிங்கை அம்பலப்படுத்திய அட்டைப்படம் வெகுசிறப்பு.

**- இராணி, போச்சம்பள்ளி.**

❍ குர்கானில் தொழிலாளர்களைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கிய கொலைகார போலீசை எதிர்த்து தன்னந்தனியே துணிவாகப் போராடிய வீரமதியின் வீரம் வியக்கத்தக்கது. மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராக இன்னும் பல வீரமதிகளின் கரங்கள் ஓங்க வேண்டும்.

**- ஆர். ராஜா, ஊரப்பாக்கம்.**

❍ தமிழ்நாடு ஆதிக்க சாதிவெறியர்களின் சொர்க்கபூமியாக மாறியிருக்கும் வெட்கக்கேட்டை ஆதாரத்துடன் வெளியிட்டு அழுத்தமான எச்சரிக்கையுடன் பதிவு செய்திருப்பது உணர்வூட்டுகிறது. ஆதிக்க சாதிகள், அரசு ஆதரவுடன் அடக்குமுறைகளை நீட்டித்துக் கொள்ளலாமே தவிர, ஒருக்காலும் நிலைநிறுத்திக் கொள்ள முடியாது என்பது மட்டும் நிச்சயம்.

**- ப.க. இராசா இராவணன், பழனி.**

❍ நடிகர் விஜயகாந்தின் உண்மையான முகத்தை உண்மையான பொருளில் சுட்டிக் காட்டியிருப்பது சிறப்பு. தண்ணீர் என்பது உயிரின் ஆதாரம்; புதிய ஜனநாயகம் என்பது போராட்டத்தின் ஆதாரம்!

**- அர்ச்சுனன், பூந்தோட்டம்.**

❍ ஆகஸ்ட் இதழின் அட்டைப்படமே அற்புதம். குர்கான் கொலைவெறித் தாக்குதலுக்குப் பிறகாவது தொழிலாளி வர்க்கம் தொழிற்சங்க வாதத்திலிருந்து விலகி புரட்சிகர அரசியலைக் கைக்கொள்ள வேண்டும். கொலைகார ராமன் கோயில் தாக்குதல் நிகழ்விற்கு ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் அலறியிருப்பது, அவற்றின் இந்து வெறி சார்பை அம்பலப்படுத்திக் காட்டி விட்டது. கண்டதேவி தேரோட்டமும் தொடரும் சாதிவெறிக் கொடுமைகளும் தமிழகத்தின் அவமானச் சின்னங்கள்.

**- மா. சத்தியசீலன், தேரெழுந்தூர்.**

❍ வியாபார நோக்கில் வெளிவரும் இதழ்களுக்கு மத்தியில் இருள் விலக்கும் செங்கதிர் போல் பு.ஜ. தொடர்ந்து வெளிவருவது, பாராட்டத்தக்கது. இதழின் மகுடமெனத் திகழ்வது ''கார்ல் மார்க்ஸ் - இன்றைய காலத்திற்கேயுரிய வழிகாட்டி'' என்ற கட்டுரையாகும். ஆர்.எஸ்.எஸ். உறைக்குள் இருந்து கொண்டு தமிழ், தமிழன், சாதி எதிர்ப்பு, ஊழல் எதிர்ப்பு என்று சவடால் பேசும் விஜயகாந்தை அம்பலப்படுத்தியிருப்பது சிறப்பு.

**- செம்மலர் மா. நடராசன், அறந்தாங்கி**

❍ படமாத்தூர் கொக்கோ கோலா எதிர்ப்புப் போராட்டத்திலும், மானாமதுரையில் போலீசு அடக்குமுறைக்கு எதிரான மாநாட்டிலும், இப்போது நெல்லை - கங்கை கொண்டான் கோக் எதிர்ப்பு பிரச்சார வேலைகளிலும் சி.பி.எம்.மும் ஏகாதிபத்தியக் கைக்கூலிகளான மக்கள் கண்காணிப்பகமும் கூடிக் குழைந்தது ஊரறிந்த உண்மை. இவ்வளவு இருந்தும் மக்கள் கண்காணிப்பகத்தின் சித்திரவதைக்கு எதிரான கலை இரவு நடந்த அன்று, சி.பி.எம். தனது ''தீக்கதிர்'' நாளேட்டில், ''தொண்டு நிறுவனங்களா? பசுத்தோல் போர்த்திய புலிகளா? என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டிருப்பது யாரை ஏமாற்ற? மக்கள் கண்காணிப்பகம் எனும் ஏகாதிபத்திய ஏஜெண்டுகளை மட்டுமல்ல; தனது கட்சி ஊழியர்களிடமே முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் சி.பி.எம்.மின் பித்தலாட்டத்தையும் தொடர்ந்து அம்பலப்படுத்த வேண்டும்.

**- குருசாமி மயில்வாகனன், சிவகங்கை.**

❍ ஆதாரம் கேட்ட ஹென்றிடிபேனுக்கு, கைக்கூலிகள் நடத்திய கூட்டத்தின் புகைப்பட ஆதாரத்தை வெளியிட்டு மூக்குடைத்திருப்பது அருமை. இத்தகைய ஏகாதிபத்திய கைக்கூலிகளை மக்களிடம் அம்பலப்படுத்தி துடைத்தெறிய வேண்டும்.

**- ப. இசக்கிமுத்து, திருநெல்வேலி.**

❍ அவமானச் சின்னமான கொலைகார ராமன் கோயில் மீதான தாக்குதலைக் கண்டு பதறுகின்றன, 'மதச்சார்பற்ற' மார்க்சிஸ்டும் காங்கிரசும், ராமன் கோயிலைப் பாதுகாக்கவும், மத நல்லிணக்கத்தை நிலைநாட்டவும் தமது ''டை∴பி''யை போலீசுக்குத் துணையாக சி.பி.எம். கட்சி அனுப்பி வைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**- கதிரவன், சென்னை.**

❍ அயோத்தி ராமன் கோயிலுக்கு இவ்வளவு பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருவது பிரமிப்பூட்டுகிறது. எந்தப் பயன்பாடும் இல்லாத ஒரு கல்லுக்கு உணர்வோடு பாதுகாப்பு அளிக்கும் ஆட்சியாளர்களையும் மதச்சார்பின்மை வேடம் போடும் ஓட்டுக் கட்சிகளையும் மக்கள் விரட்டியடிக்க வேண்டும்.

**- ஜீவா, சென்னை.**

❍ காலனியாதிக்கத்தின் கொடூரத்தை அறிந்திராத இன்றைய தலைமுறையினருக்கு குர்கான் கொடூரத்தைக் கண்டதிலிருந்து அன்றைய ஜாலியன்வாலாபாக்கும் இன்றைய மறுகாலனியாதிக்கமும் என்ன வென்று புரியும். தலையங்கக் கட்டுரை எடுப்பாகவும் உணர்வூட்டுவதாகவும் அமைந்துள்ளது. விஜயகாந்த் பற்றிய கட்டுரை சரியான நேரத்தில் வந்திருப்பது சிறப்பு. சிறீராம் ∴பைபர்ஸ் ஆலையில் பு.ஜ.தொ.சங்கத்தின் சமரசமற்ற போராட்டமும் போர்க்குணமும் நம்பிக்கையின் தொடக்கமாக அமைந்துள்ளது.

**- வாசகர்வட்டம், சென்னை.**

❍ இந்திய இராணுவம் அமெரிக்காவின் நேரடியான கூலிப்படையாகவும், இந்திய விவசாயிகள் பன்னாட்டுக் கம்பெனிகளின் கூலிகளாகவும் மாற்றப்பட்டு வருவதை அட்டைப்படக் கட்டுரையும் ஒப்பந்த விவசாயம் பற்றிய கட்டுரையும் பேரபாயமாக உணர்த்துகிறது. கார்ல் மார்க்ஸ், இன்றைய காலத்திற்கேயுரிய வழிகாட்டி மட்டுமல்ல; எக்காலத்துக்குமான வழிகாட்டி என்பதையும் இனி வருங்காலம் கம்யூனிஸ்டுகளுக்கே உரியது என்பதையும் பு.ஜ. படித்த எவரும் உணர முடியும்.

**- புரட்சித்தூயன், தருமபுரி.**

❍ அரசுத்துறை நிறுவனமான ''பெல்'' (BHEL) பங்குகளை விற்க முயன்ற காங்கிரசை கடித்துக் குதறி ''பெல்''லைக் காப்பது போல நடித்த போலி கம்யூனிஸ்டுகள் மீது ''பெல்'' நிறுவனத்துக்கான ஒப்பந்தத்திலிருந்தே புதிதாக ஒரு ஊழல் குற்றச்சாட்டு எழுந்து கேரளாவில் சி.பி.எம். கட்சியினரை நாறடித்துக் கொண்டிருக்கிறது. கேரளாவில் 'இடதுசாரி' கூட்டணி ஆட்சியின் போது அக்கட்சியின் மின்சாரத்துறை அமைச்சராக இருந்த விஜயன் மூன்று நீர் மின் நிலையங்களை புதுப்பிக்கும் ஒப்பந்தத்தை ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்கு வழங்கியுள்ளார். நியாயமாக இந்த ஒப்பந்தம் ''பெல்''லுக்கு கிடைத்திருக்க வேண்டும், அவ்வாறு கிடைத்திருந்தால் அதே வேலையை ''பெல்'' நிறுவனம் தரமாகவும், பாதி செலவிலும் முடித்துக் கொடுத்திருக்கும். ''பெல்''லும் இதையே கூறி ஒப்பந்தத்தை பெற முன் வந்தது; ஆனால் மாண்புமிகு அமைச்சரோ 'தேசப்பற்றோடு' ''பெல்''லைத் துரத்திவிட்டு ஒப்பந்தத்தை பன்னாட்டு நிறுவனத்திற்கு வழங்கி பணியை முடித்துக் கொடுக்க ரூ. 374 கோடியும் கொடுத்துள்ளார். இந்த 'தேசபக்தர்கள்' தான் ''பெல்'' பங்குகள் விற்கப்படுவதை தேசத் துரோகமென்று குரைக்கிறார்கள்.

தற்போது இந்த ஒப்பந்தத்தின் மூலம் ரூ. 110 கோடி நட்டமடைந்து விட்டதாக விஜயன் மீது கேரள மின்வாரியம் ஊழல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது. கள்ளச் சாராய ரவுடிகளுக்கே வழிகாட்டிய போலிகளுக்கு இதெல்லாம் சுண்டைக்காய் சமாச்சாரம், ஆனாலும் இதில் வேடிக்கை என்னவென்றால் விஜயனின் சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர் அச்சுதானந்தனும் விஜயனுக்கு எதிரான அணியில் நின்று கொண்டு கோஷம் போடுகிறாராம். ஏன்? அச்சுதானந்தனுடைய பங்கையும் சேர்த்து விழுங்கி விட்டாரா விஜயன்? போலிகளுக்கே வெளிச்சம்!

**- வெண்மணி.**

www.padippakam.com

## தண்ணீர் யாருக்குச் சொந்தம்?

# மக்களுக்கா உலக வங்கிக்கா?

### தண்ணீர் தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்து நாடெங்கும் போராட்டங்கள் வீறுகொண்டு எழத் தொடங்கிவிட்டன.

**நா**டு முழுவதும் ஏன், உலகெங்கும் தண்ணீர் தனியார்மயமாவதையும் வியாபாரமாவதையும் எதிர்த்து போராட்டங்கள் பெருகி வருகின்றன. உயிருக்கே ஆதாரமான தண்ணீரைத் தனது கொள்ளை லாப வெறிக்காக சரக்காக்கிற 'ஷைலக்'குகளான பன்னாட்டு பகாசுர நிறுவனங்களை ஒழித்துக் கட்டாத வரை இப்போராட்டங்கள் ஓயப் போவதுமில்லை.

கேரள - பாலக்காடு மாவட்டத்திலுள்ள குற்றியாடி கிராம பஞ்சாயத்து தலைவர், வியாபாரிகள் என மக்களனைவரும் இணைந்து ஆகஸ்ட் 15-இல் கிராமத்தை 'கோலா' இல்லாத கிராமம் என அறிவித்துள்ளனர்.

அதே ஆகஸ்ட் 15-இல் பிளாச்சிமடாவில் ''கோக் ஆலையைக் கைப்பற்றுவோம்!'' என்ற முழக்கத்துடன் கே.என்.ராமச்சந்திரன் தலைமையிலான இ.பொ.க. (மா-லெ) கட்சியைச் சேர்ந்த ''யுவ ஜன வேதி'' என்ற இளைஞர் அமைப்பு கோக் ஆலை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தியது. ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி மறுத்த போலீசு கவச உடை, இரும்புத் தொப்பி, நீர் பீச்சியடிக்கும் எந்திரத்துடன் வந்து ஆர்ப்பாட்டத்தைத் தடுத்தது.

''யுவ ஜன வேதி'' அமைப்பினர் தடையை மீறிய போது கண்மூடித்தனமான, காட்டுமிராண்டித்தனமான தடியடியை நடத்தியது, போலீசு. உற்பத்தி முடக்கப்பட்டுள்ள கோக் ஆலையினுள் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீப்பந்தங்களை வீசினர். அதேநேரம் தடியடி நடத்திய சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சட்டையைப் பிடித்து உலுக்கிய ஒரு இளைஞர் ''தேசத்தையே சூறையாடும் கோக்கின் எடுபிடியா நீ?'' என சரமாரி கேள்விகள் எழுப்பி அவனது மனச்சாட்சியையும் உலுக்கினார்.

அப்போது வந்திறங்கிய கூடுதல் போலீசுப் படை மீண்டும் ஒரு கொடூர தடியடியை அரங்கேற்றியது. ''யுவஜன வேதி'' இளைஞர்களைக் கைது செய்ததோடு உள்ளூரிலுள்ள ''கோலா எதிர்ப்பு சமிதி'' அமைப்பின் தலைவரையும் அவ்வமைப்பின் முன்னணியாளர்களையும் கைது செய்தது கோக்கின் எடுபிடியான போலீசு.

உள்ளூர் மக்களோ, போலீசை மறித்து தமது தலைவர்களை விடுவிக்காமல் ஓரடி கூட நகர விடமாட்டோம் எனப் போராடவே பீதியடைந்த போலீசு ''கோலா எதிர்ப்பு சமிதி'' அமைப்பினரை விடுதலை செய்து ''யுவஜன வேதி'' அமைப்பினரை மட்டும் கைது செய்து கொண்டு சென்றது.

தெற்கே மட்டுமல்ல, தண்ணீரைத் தனியார்மயமாக்க நிர்பந்திக்கும் உலக வங்கி தலைவர் பால் ஓல்ஃபோவிஸ் இந்தியப் பயணமாக தில்லி வந்த போது ''தண்ணீரில் கை வைக்காதே!'' என உலக வங்கி அலுவலகம் முன்பு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ''கொல்லைப்புற வழியாக தண்ணீரைத் தனியார்மயமாக்கும் உலக வங்கியின் கொள்கைகள், நிபந்தனைகளை எதிர்த்து'' ஆகஸ்ட் 20-ஆம் தேதி ''தண்ணீர் ஜனநாயகத்திற்கான குடிமக்கள் முன்னணி'' என்ற கூட்டமைப்பினர் நடத்திய ஆர்ப்பாட்டம் தில்லியையே உலுக்கியது.

தண்ணீரைத் தனியார்மயமாக்கக் கோரும் உலக வங்கியின் கொள்கைகளைக் கண்டித்து, தில்லியில் உள்ள உலக வங்கி அலுவலகம் முன்பாக ''தண்ணீர் ஜனநாயகத்திற்கான குடிமக்கள் முன்னணி'' என்ற தன்னார்வ அமைப்பு நடத்திய ஆர்ப்பாட்டம் (மேலே); கேரளாவின் பிளாச்சிமடா பகுதியின் நிலத்தடி நீரை ஒட்ட உறிஞ்சிவிட்ட கோக் ஆலைக்குள் போலீசின் தடையை மீறி நுழைய முயலும் ''யுவ ஜனவேதி'' அமைப்பின் செயல்வீரர்கள்.







படிப்பகம்

www.padippakam.com

அக்கூட்டமைப்பின் தலைவர்கள் (இதில் டாக்டர் வந்தனா சிவா என்ற உயிரிவாழ் சூழலியல் விஞ்ஞானியும் ஒருவர்) உலக வங்கித் தலைவரைச் சந்தித்து, ''இந்தியாவில் தண்ணீர் பற்றாக் குறையுள்ளது. அதை ஒருபோதும் வியாபாரமாக்க அனுமதிக்க மாட்டோம்!'' என எச்சரித்துள்ளனர்.

தில்லிக்கு குடிநீர் வழங்கும் சோனியா விகார் திட்ட ஆலோசனைக்கான ஒப்பந்தத்தைப் பெற ''பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்'' (பி.டபிள்யு.சி.) என்ற நிறுவனம் 3 முறை போட்டியிட்டும், நிராகரிக்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் உலக வங்கி தலையிட்டு, இறுதியில் தில்லி குடிநீர் வாரிய அதிகாரிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, பி.டபிள்யு.சி. நிறுவனத்திற்கே ஆலோசனைக்கான ஒப்பந்தத்தைப் பெற்றுத் தந்தது.

தண்ணீரை வியாபாரமாக்குவது - தனியார்மயமாக்குவது மட்டுமின்றி, தான் கைகாட்டும் பன்னாட்டு பகாசுர நிறுவனங்களுக்கே ஒப்பந்தங்களை வழங்க வேண்டும் என அடாவடித் தனம் செய்கிறது உலக வங்கி. கடன் பெறும் இந்தியா, கைகட்டி சேவகம் செய்கிறது.

தில்லியில் நடந்த ஆர்ப்பாட்டத்தை கண்டு அரண்டுபோன உலக வங்கித் தலைவர், சோனியா விகார் திட்டத்திற்கும் உலக வங்கிக்கும் சம்பந்தமில்லை என யாரும் நம்ப இயலாத பொய்யைக் கூறினார்.

தில்லி ஆர்ப்பாட்டத்திற்கு முதல் நாளே கேரள மாசு கட்டுப்பாட்டு வாரியம், பிளாச்சிமடாவில் 'கோக்' ஆலையால் நிலத்தடி நீரின் நச்சுத்தன்மை அதிகரித்துள்ளதாகக் கூறி, உற்பத்தியை முற்றாக நிறுத்தக் கோரி உத்திரவிட்டுள்ளது. ஆனால், தமிழக அரசோ தாமிரவருணியை நஞ்சாக்க கோக்கிற்கு அனுமதியளித்துள்ளது.

நெல்லை தாமிரவருணியில் 'கோக்'கை எதிர்த்த புரட்சிகர அமைப்புகளின் வீச்சான பிரச்சாரம் நடந்து வருகிறது. இப்போராட்டம் தனித்து நடக்கும் ஒன்றல்ல என்பதையே பிளாச்சிமடாவிலும், தில்லியிலும் நடந்த போராட்டங்கள் நிரூபிக்கின்றன. பொலிவியாவின் கொச்சபம்பா நகர மக்கள் ''பெக்டெல்''லை விரட்டியடித்தது போல, தண்ணீர் மீதான சமூக உரிமையைப் பறிக்க வரும் பன்னாட்டு பகாசுர கம்பெனிகளை இந்திய மக்கள் விரட்டியடிக்கும் நாளும் வெகு தூரமில்லை.

• சுப்பு

# "கம்பெனி" நாயகமே அமெரிக்காவின் ஜனநாயகம்

## அமெரிக்க அரசின் ஒரு முன்னாள் பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்

"என்னைப் போன்றவர்கள் அமெரிக்காவின் சார்பாக உலகெங்கும் பல ஆண்டுகள் நச்சுக் காற்றை விதைத்தோம்.... அவை இன்று ஒன்றுதிரண்டு புயலாய் வீசுகின்றன....'', என்கிறார் ஜான் பெர்கின்ஸ். 'செப்டம்பர் 11' நிகழ்வானது, உலக வர்த்தகக் கட்டிடங்களை மட்டுமல்ல; ஜான்பெர்கின்ஸ் போன்றோரின் துரோகங்களையும் குத்திக் கிழித்துவிட்டது; பலரது 'கோமா' உறக்கங்களையும் தகர்த்துத் தரைமட்டமாக்கிவிட்டது.

இந்த ஜான்பெர்கின்ஸ் அமெரிக்க அரசால் ஊட்டி வளர்க்கப்பட்ட 'பொருளாதாரக் கூலிப் படையாள்', அதாவது ஓர் அடியாள். ஆங்கிலத்தில் 'எகனாமிக் ஹிட்மேன்', 'இ எச் எம்' (EHM) என்கிறார்கள். இப்போது ஜான் பெர்கின்ஸ் மாறிய இதயம். நொறுங்கிய உலக வர்த்தகக் கழக இடிபாடுகளில் எத்தனையோ பேர் அழிந்ததைக் கண்ணால் கண்ட பெர்கின்ஸ், இப்போது உயிரோடிருக்கும் 22 வயதான தன் மகளுக்கு ஓர் எதிர்காலம் இருக்குமா, அதைத் தன்னால் உருவாக்க முடியுமா, அப்படி ஓர் எதிர்காலத்தை முழுதாக உருவாக்கிக் கொடுப்பதற்குப் பதிலாக அதில் ஒரு பகுதி அழிவதற்குத் தானே காரணமாக இருந்துவிட்டோமே - என்று சுய விசாரணைக் கேள்விகளால் நிலை குலைந்து போனார். இதுநாள் வரை அமெரிக்காவின் தேசங்கடந்த நிறுவனங்களுக்காக அடியாள் வேலை பார்த்தவர், அதற்கெல்லாம் கழுவாயாக, திரைமறைவில் நடந்த பல அரசியல் அந்தரங்கக் கிரிமினல் குற்றங்களைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டார். இதை எழுதி முடிப்பதற்குள் நான்குமுறை அவர் மிரட்டப்பட்டார் - இது எதிர்பார்க்கக் கூடியது தான்.


2005-ன் தொடக்கத்தில் கிட்டத்தட்ட 10 வாரங்கள் - 70 நாட்களில் பல இலட்சம் பிரதிகள் விற்றுத் தீர்ந்த அந்த நூலில் (''பொருளாதார அடியாள் ஒருவரின் வாக்குமூலங்கள்'') அப்படி என்னதான் எழுதியிருந்தார் ஜான் பெர்கின்ஸ்? தனது வாழ்க்கையின் இருண்ட பக்கங்களைத் திறந்து காட்டுவதற்கும் ஒரு தார்மீகத் துணிச்சல் வேண்டும் - அப்படிப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலங்கள் நிறைந்ததே அந்த நூல்.

• • •

ஜான் பெர்கின்ஸ் - வர்த்தகத் துறை சம்பந்தமாக பட்டப் படிப்புக்கும் கீழ்நிலை வரைதான் படித்தார். ஏழ்மைக் குடும்பம். முதல் மனைவியின் மாமா, தேசியப் பாதுகாப்பு முகமைக்கு (இந்த ஏஜென்சிதான் என்.எஸ்.ஏ. எனப்படும் அமெரிக்க உளவு நிறுவனம்) இவரைச் சிபாரிசு செய்தார்.

இந்த என்.எஸ்.ஏ. 1952-இல் அதிபர் ட்ரூமேனால் நிறுவப்பட்டது. இங்கிலாந்து, ஜெர்மனி என்று இரு கிளைகளோடு இயங்கும் உளவு நிறுவனம், இது. ஜேம்ஸ் பாம்ஃபோர்டு என்ற எழுத்தாளரின் வருணனையில் என்.எஸ்.ஏ. ஒரு 'புதிரான அரண்மனை'; 1970 கணக்குப்படி சுமார் 70,000 அடியாட்கள் வேலை செய்த மர்ம மாளிகை. அதன் தலைவர்கள் சங்கேத (ரகசிய) மொழியில் வல்லவர்கள். பிரசித்தி பெற்ற அமெரிக்க சி.ஐ.ஏ. உளவு நிறுவனத்தின் சகோதரன்தான் என்.எஸ்.ஏ.

அமெரிக்காவின் அரசியல் படுகொலைகளையும் அரண்மனைச் சதிகளையும் வாக்குமூலமாக அளித்து அம்பலப்படுத்திய முன்னாள் அடியாள் ஜான்பெர்கின்ஸ்.



இதற்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதே விசித்திரமான சடங்கு என்பார்கள். நன்கு படித்த - பார்வைக்கு அழகான, மிகக் குறுகிய காலத்தில் சம்பாதித்துப் பெரிய மனிதராக ஆக வேண்டுமென்ற பேராசையும், வெறியும் கொண்ட சிறு நகர இளைஞர் - இளைஞிகளை இந்த



படிப்பகம்

அமைப்பு 'கொக்கி' போட்டு இழுக் கும். 'அதிகாரம், செக்ஸ், பணம்' — மூன்றும் கொடுத்துக் குளிப்பாட்டுவார் கள். ''இதெல்லாம் சரிப்படாது, ஆளை விடுங்கப்பா'' என்று யாராவது 'ஜகா' வாங்கினால் கழுத்தில் கத்தி வைத்து மிரட்டப்படுவார்கள். தேர்ந்தெடுக்கும் போதே அவர்களின் மனச்சாட்சி களைக் கொன்று விட்டுத்தான் களத்தில் இறங்குவார்கள். பெர்கின்ஸூம் இப்படித்தான் பலிகடா போலத் தள்ளப்பட்டார்.

அவர் வேலையை இப்படிச் சுருக்க மாகச் சொல்லலாம். ஏழை நாடுகளுக் குப் பறந்து செல்லவேண்டும். அங்கே எல்லாவித உள்கட்டுமான வேலைகள் செய்வதற்கும், உலக வங்கி போன்ற நிறுவனங்கள் எந்தெந்த நாடுகளுக்குக் கடன் கொடுக்கலாம் என்றும் பரிந்து ரைக்க வேண்டும். நினைத்த நேரத்தில் அதிபர்கள், பிரதமர்கள், மந்திரிகள், எம்.பி - எம்.எல்.ஏ.க்கள்., எல்லாத் துறை அதிகாரிகள், தூதரகங்கள், கலாச் சார மையங்களிடம் போகலாம், வர லாம், பேசலாம்; விருந்துகள், பேச்சு வார்த்தைகள் நடத்தலாம்.

எத்தனையோ நாடுகளின் தலைவர் களை அணுகி, புகழ்ந்து பேசி - ஏய்த்து ஆசைகாட்டி - மிரட்டி வசப்படுத்தியி ருக்கிறார் இந்த அடியாள் பெர்கின்ஸ். அவரது இலக்கு - பல ஆயிரம் கோடி கடன் தரக்கூடிய ஏகாதிபத்திய நாடு களின் திட்டங்களைக் கொண்டு ஏழை நாடுகளைச் சிக்க வைக்க வேண்டும். இதற்கு இலஞ்சமாக பல ஆட்களுக் குப் பலவிதமான பரிசுகள் - சூட்கேசி லிருந்து தொடங்கி சென்ட் குப்பிவரை தள்ளிவிட வேண்டும். இதற்கு வழங் கப்படும் அசிங்கமான பெயர் லஞ்சம். கௌரவமான பெயர் - 'பரிசு'; பரஸ்பரம் நம்பிக்கையைப் பெற உதவும் 'உறவு'.

கடனைத் தருவது உலக வங்கி, ஐ.எம்.எஃப் மற்றும் அமெரிக்க நிதி நிறுவனம் போன்றவை. அந்தக் கடனை வைத்து அந்த நாடுகள் திட் டத்தை நிறைவேற்ற அமெரிக்க கம்பெ னிகளோடு ஒப்பந்தம் போட வேண் டும். பெர்கின்ஸ் செய்ய வேண்டிய முக்கிய வேலை இதுதான். அமெரிக்க கம்பெனிகள் ஆதாயம் அடைய வேண்டும். சிந்தாமல் சிதறாமல் ஒப்பந் தங்களை அடைவதே அவர் இலக்கு.

உளவு பார்ப்பது, உளவு நிறுவனங் களில் வேலை பார்ப்பது புதியதல் லவே; பணம் - வியாபாரம் தோன்றிய நாள்முதல் நடந்து வருவதுதானே என்று உங்களுக்குச் சந்தேகம் எழலாம். ஆனால், அடியாள் (ஹிட்மேன்)

**நாடுகளின் அரசுகள் – வங்கிகள் – பன்னாட்டுக் கம்பெனிகள் ஆகிய மூன்றின் கூட்டாக உருவெடுத்துள்ள கார்ப்பொரேட்டோக்ரசி [கார்ப்பொரேட் என்றால் மிகப் பெரும் வர்த்தக – இணைக் கழகம் என்று பொருள்] — அதாவது, 'கம்பெனி நாயகம்' தான் உலகின் முதல் எதிரி என்கிறார், ஜான்பெர்கின்ஸ்.**



வேலை, முன்பெல்லாம் பல துறை களில் நடந்த பலவேலைகளையும் ஒரே ஆளில் இணைப்பது. பன்னாட்டு மூலதனம் ஒரு நாட்டுக்குள் இறங்குவ தற்கான எல்லா உத்தரவாதமான தயா ரிப்புகளையும் செய்து முடிக்கக்கூடிய உயிருள்ள மனித கம்ப்யூட்டர். இந்த முள்ளு பொறுக்கிச் சாமி முன்னே போய் எல்லா தடைகள், தடங்கல்களை யும் நீக்கிச் சுத்தப்படுத்திவிட்டால், அமெரிக்க கம்பெனிகளின் மூலதனம் நேராக உள்ளே இறங்கி, ஊர்வலம் வரும்.

முன்பு இந்த வேலைகளை நேரடி யாக அமெரிக்க அரசு ஊழியர்களே செய்தார்கள். போய் வேலை செய் கின்ற நாடுகளில் பிடிபட்டு விட்டால் அமெரிக்க அரசின் பெயர் கெட்டுப் போய்விடுமல்லவா, அதனால்தான் ஏதோ ஒரு தனியார் கம்பெனியின் ஊழியனாக இருந்துவிட்டால், அது அப்படியே போய் விடும். பிடிபட்டுத் தண்டனை அடைந்தாலும் எல்லாவற் றையும் 'ஏற்றவித'த்தில் கவனித்துச் சரி செய்து விடுவார்கள். இதனால் மற்ற எத்தனையோ உளவாளிகளை விட, ஹிட்மேன்களுக்கு - இவ்வகை அடி யாட்களுக்கு மவுசு கூடுதல்.

உலகில் உள்ள எல்லா நாடுகளுமே இந்த அடியாட்களுக்குப் பயந்து நடுங்க வேண்டும் என்றில்லை. அந்தக் கம்பெனிகளுக்குப் பணிய மறுக்க லாம், மறுத்திருக்கிறார்கள். அதற்க டுத்து 'வேட்டை நாய்கள்' அமெரிக்கா விலிருந்து வரும். அரசியல் கொலை கள் நடக்கும்; தலைவர்கள் சிக்கவில் லையானால், அவரோடு உடன் இருப் பவர்கள், கட்சிக்காரர்களுக்கும் வலை விரிக்கப்பட்டு ஆட்சி மாற்றம் கூட நடக்கும்; தேவையானால் இரண்டும் சேர்த்தே கூட நடத்துவார்கள்.

ஈரானின் மொஸாதேக் அரசு கவிழ்க்கப்பட்டு, ஷா ஆட்சி வந்தது - எதனால்? அமெரிக்காவின் ஸ்டாண் டர்டு ஆயில் மற்றும் கல்ஃப் ஆயில் என்ற கம்பெனிகளின் நலன்களை மொஸாதேக் காப்பாற்றவில்லை.

கவுதமாலாவில் ஆயுதப்படை எடுப்பு - அத்துமீறி அமெரிக்கா நுழைந்தது - ஏன்? யுனைடெட் ஃப்ரூட் - பழக்கம்பெனியின் நலன் காப்பாற் றப்படவில்லை. அந்தக் கம்பெனி அமெரிக்காவுடையது.

கியூபாவில் அமெரிக்கத் தொழிற் கழகங்கள் பலவற்றின் சொத்துக் களைத் தேசியமயமாக்க ஃபிடல் காஸ்ட்ரோ முயன்றதற்காக, அவரது ஆட்சியைக் கவிழ்க்க அதிரடி முயற்சி கள் நடந்தன.

சிலியில் அலெண்டே அரசை அசைத்துக் கவிழ்த்தது அமெரிக்க ஐ.டி.டி. கம்பெனி; உதவி செய்தது அமெரிக்க உளவு நிறுவனம். அலெண்டே கொல்லப்பட்டார்.

பெர்கின்ஸோடு நன்கு பழகி அறி முகமான பனாமா அதிபர் ஓமார் டோர்ரி ஜோஸூம், ஈக்குவடாரின் அதி பர் ஜெய்மே ரோல்டோஸூம் ஒரே மாதிரியான பின்னணியில் மிகக் கொடூ ரமான விமான விபத்துகளில், 1981 மே-ஜூலை என்று இருமாத இடை வெளிகளில் கொல்லப்பட்டார்கள்.

- மேலே சொன்ன எல்லாச் சதிகளி லும் அடியாள்கள்தான் முன்தயாரிப்பு வேலை செய்தார்கள்.

இந்தியாவில் என்ன நடந்தது என்று உங்களால் ஊகிக்க முடியும். ரகசிய மாக ஒரு விசவாயு தயாரிப்பு ஆலை யாக 'போபால் யூனியன் கார்பைடு'

www.padippakam.com

சட்டப்புறம்பாக தொடங்க, இயங்க, கசிவு - 'விபத்து'க்குப் பிறகு அதன் முதலாளி ஆண்டர்சன் அமெரிக்காவுக்குத் தப்பிக்க - உள்வேலை செய்தவர்கள் அடியாட்கள்தான். அமெரிக்க 'என்ரான்' மகாராஷ்டிராவில் நுழைந்து கொள்ளையடிக்க ஏற்பாடு செய்ததும் அவர்களே.

பெர்கின்ஸ், சவூதியில் தான் செய்த வேலைகளைப் பச்சையாகவே வைத்திருக்கிறார் தன் நூலில். 1970-ஆம் ஆண்டுகளில் எண்ணெய் விலையேற்றம் உலகை உலுக்கிய போது அமெரிக்காவின் பார்வை சவூதி மீது விழுந்தது; பல லட்சம் கோடி பெட்ரோ டாலர் அமெரிக்காவைச் சேருவதற்கு சவூதி சரிக்கட்டப்பட்டது. வெளியே தெரிய வராத 'சாணக்கியத் தந்திரம்' பெர்கின்ஸ் போன்ற அடியாட்களுடையது தான். அமெரிக்க அரசும், உயர்மட்ட அதிகாரிகளும் சம்பந்தப்படாமல் அங்கு ஓரணுவும் அசையவில்லை என்பதை அவர் அம்பலப்படுத்துகிறார்.

இவை சட்டப்புறம்பான கிரிமினல் குற்றங்களல்லவா? ஆமாம். ஆனால் சாதாரணமானவை அல்ல; 'மேட்டுக்குடி வகைக் குற்றங்கள்'. பொதுவாக, இவை ரத்தமின்றி நடத்தப்படும் பொருளாதார யுத்தங்கள். தேவையானால், கொஞ்சமாக ரத்தமும் சேர்ப்பார்களாம்.

●●●

**உ**லகம் முழுவதும் ஜனநாயகத்தைப் பரப்புகின்ற 'புனிதக் கடமை' தன் தோளில் சுமத்தப்பட்டுள்ளதாக அடிக்கடி பிதற்றும் அமெரிக்க அதிபர்களை எள்ளி நகையாடும் பெர்கின்ஸ், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சீரழிந்த உலகப் பொருளாதார நிலைமையிலிருந்து தொடங்கி, ஐ.எம்.எஃப்., உலக வங்கி போன்ற கடன் நிறுவனங்கள் உருவாகியதிலிருந்து அவை முழுக்க முழுக்க அமெரிக்கக் கைகளில் அதிகார சக்தியாக உருவெடுத்தது வரை அமெரிக்காவின் ஈராக் - ஆப்கான் போர்கள் வரை நார் நாராய்க் கிழித் தெறிகிறார். 'நாடுகளின் அரசுகள் - வங்கிகள் - பன்னாட்டுக் கம்பெனிகள்' ஆகிய மூன்றின் கூட்டாக உருவெடுத்துள்ள கார்ப்பொரேட்டோக்ரசி (கார்ப்பொரேட் என்றால் மிகப் பெரும் வர்த்தக - இணைக் கழகம் என்று பொருள்) - அதாவது, 'கம்பெனி நாயகம்' தான் உலகின் முதல் எதிரி என்கிறார், ஜான் பெர்கின்ஸ். அரசியல் ரீதியில், ஏகாதிபத்தியத்தின் மறுகாலனியாக்கம் என்பது இதுதான். அமெரிக்கா நல்ல அரசு அல்ல, உலகின் பேரரசாகத் துடிக்கின்ற சாத்தானின் பேரரசு என்கிறார் அவர்.

பத்து ஆண்டுகள் ஒரு பொருளாதார - அடியாளாக வேலை பார்த்த பெர்கின்ஸ் தன்முகத்தின் மூலமாக அமெரிக்க மக்களின் முகங்களையும் பளிச்சென்று காட்டுகிறார்: ''இனிமேலும் கார்ப்பொரேட் நாயகத்தை, உலகப் பேரரசை விரிவாக்குவதற்கு வேலை செய்யாதீர்கள். உங்கள் முகம் அதுவல்ல. டி.வி. பார்ப்பதை விட்டு வெளியே வாருங்கள், நமக்குள் பேசத் தொடங்குவோம். கம்பெனி நாயகத்துக்கு எடுத்துக்காட்டு டி.வி.யேதான். 1980-களில் 50 கழகங்கள் டி.வி.யில் ஆதிக்கம்; இப்போது, செய்தி ஊடகச் சந்தையில் ஒன்றை ஒன்று கடித்துத் தின்று, ஆறே ஆறு பகாசுர நிறுவனங்களாகிவிட்டன. உலகப் பேரரசாக அமெரிக்கா பிரம்மாண்டமாக வளர்கிறது - இது ஒரு சதவீத அமெரிக்கருக்கே சொந்தம்; உலகின் ஏழை நாடுகளிலோ, ஒவ்வொரு நாளும் 50,000 மக்கள் பசியால், வறுமைத் துன்பத்தால், நோயால் சாகிறார்கள். பேரரசுகள் நிலைக்காது; அப்படி ஒரு வரலாறும் கிடையாது; ஆனால், ஒன்று போனால் மிக மோசமான மற்றொன்று வரக்கூடும். இப்போதைக்கு நமக்குள்ள ஒரு நம்பிக்கை உலகெங்குமுள்ள ஏழை மக்கள். எந்த உலகமயம் பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதோ, அதுவே உலக மக்களை இணைத்துவிட்டது.''

சாத்தானின் பேரரசு எங்கேயிருந்து இத்தனைக் கொடுங்கோன்மையைக் கற்றது? இட்லரிடமிருந்து என்று சொல்கிறார்கள். ஆனால், இட்லரைக் கேட்டபோது சொன்னானாம், செவ்விந்தியர்களை அமெரிக்கா அழித்ததிலிருந்து தான் நான் கற்றுக் கொண்டேன் என்று. இதுவொருபுறமிருக்கட்டும். ''மக்களாகிய நாம்தான், அமெரிக்கப் பேரரசின் விபரீதக் கனவு பற்றி ஆராய்ந்து, அந்தச் சாத்தானின் பேரரசை வெறுத்து, மாற வேண்டும். நாம் மாறினால் உலகை மாற்றலாம்'' என்கிறார் பெர்கின்ஸ்.

பெர்கின்சின் மனச்சாட்சி நம்மையும் உலுக்க வேண்டும். உலகப் பேரரசுக் கனவு காணும் கொலைகார அமெரிக்காவின் பிரம்மாண்டமான தேர்ச் சக்கரத்தில் இந்திய மக்களைப் பிணைத்துவிட இந்திய ஆட்சியாளர்கள் துடிக்கிறார்கள்; பெர்கின்சின் அனுபவத்தையும் சேர்த்துக் கொண்டு சாத்தானின் பேரரசுக் கனவுகளை நொறுக்குவதற்காக, நமது மனச்சாட்சிகளை உலுக்கிக் கொள்வோம்!

● வேலாயுதம்

---

14-ஆம் பக்கத் தொடர்ச்சி

கட்சி மக்கள் கமிட்டிகளை நிறுவி, போராடும் மக்களுக்கு எதிராக எதிர்ப் பிரச்சார பாதயாத்திரைகளை நடத்தியதோடு, பழங்குடியினர் மீதான ஒரிசா அரசின் அடக்குமுறையை ஆதரித்து நின்றனர். இந்தக் கயவாளிகள்தான் இப்போது ''போஸ்கோ'' ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகச் சதிராடுகின்றனர். இவர்களோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு இடது, வலது போலி கம்யூனிஸ்டுகள் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். ஒரிசாவின் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களின் நிலமும் வாழ்வும் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போது, மாயாவதி, ராம் விலாஸ் பாஸ்வான் உள்ளிட்டு எந்தவொரு தலித் தலைவரும் போஸ்கோ ஒப்பந்தத்துக்கு எதிராக வாய்திறக்கவில்லை.

ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தைப் புரிந்து கொண்டுள்ள ஒரிசா பழங்குடியின மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு போராடி வருகிறார்கள். ''இது எங்கள் பூமி; இதை அந்நியர்கள் அபகரிக்க ஒருக்காலும் அனுமதிக்க மாட்டோம்!'' என்ற அறிவிப்புப் பலகையுடன் கிராம எல்லையில் மூங்கில் குழாய்களைக் கொண்ட தடுப்பரண்களைக் கட்டி ஏற்கெனவே ரயாகடா மாவட்டத்தின் பழங்குடியின மக்கள் பாக்சைட் சுரங்கத் திட்டத்தை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். ஜாஜ்பூர் மாவட்ட மக்கள் அலுமினிய ஆலை நிறுவப்படுவதற்கு எதிராக தொடர்ந்து போராடுகிறார்கள். இப்போது போஸ்கோ ஆலையால் தமது வாழ்வுரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து பாரதீப் வட்டார மக்கள் போராடத் தொடங்கியுள்ளார்கள்.

ஒரிசா மக்களின் போராட்டம் வெறுமனே நிவாரணம், மறுவாழ்வு உரிமைக்கான போராட்டமல்ல; சாராம்சத்தில் இது நாட்டை மீண்டும் காலனியாக்கிவரும் துரோக ஆட்சியாளர்களுக்கும் தனியார் - அந்நியப் பெரு முதலாளிகளின் சூறையாடலுக்கும் எதிரான போராட்டம். இந்நிலையில், நாட்டைத் தொழில்மயமாக்குவது என்ற பெயரில் நமது வாழ்வையும் வளத்தையும் பறிக்கும் தனியார்மய - தாராளமயத்தை ஆதரித்து நிற்கப் போகிறோமா? அல்லது, ஒரிசா மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து, நாட்டையும் மக்களையும் சூறையாடிவரும் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான சுதந்திரப் போரில் நம்மை அர்ப்பணித்துக் கொள்ளப் போகிறோமா?

● மனோகரன்

www.padippakam.com

# சிறுமுகை நகரம்:
# இன்னுமொரு போபால்?

## சௌத் இந்தியா விஸ்கோஸ் ஆலையில் கேட்பாரின்றிக் கிடக்கும் உயிர்கொல்லி இரசாயனப் பொருட்கள் கோவை மாவட்ட மக்களின் உயிருக்கே உலை வைக்கின்றன.

**போ**பால் நகரில் நடந்த விஷ வாயுப் படுகொலை போல, கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகேயுள்ள சிறுமுகையில் உள்ள விஸ்கோஸ் ஆலையினால் அப்பகுதியே சுடுகாடாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்டு 15-ம் தேதி இரவு, விஸ்கோஸ் ஆலையிலுள்ள பேரபாயம் விளைவிக்கக் கூடிய கார்பன்-டை-சல்பைடு அமிலத் தொட்டிகளின் அருகில், திறந்தவெளியில் கொட்டிக் கிடந்த கந்தகக் கழிவுள் தீ பற்றி எரிந்து, அதிலிருந்து வந்த நச்சுக் காற்று ஆலைக்கு அருகேயுள்ள மூலையூர், கூத்தாமண்டிப் பிரிவு, அம்மன் புதூர், ரேயன் நகர் மக்களுக்கும் மற்றும் சிறுமுகை நகர மக்களுக்கும் பல தரப்பட்ட பாதிப்பை ஏற்படுத்தியது.

நச்சுப் புகையால் சிலர் மயக்கமடைந்தனர். பலருக்கும் மூச்சுத் திணறலோடு, கண், தொண்டை, நெஞ்சு ஆகியவற்றில் கடும் எரிச்சல் ஏற்பட்டது. ஆலையிலிருந்து வரும் நச்சுப் புகைதான் காரணம் என உணர்ந்த பலரும் ஊரை விட்டு வெளியேறினர். உடனடியாகத் தீயணைப்புத் துறைக்கு தகவல் தரப்பட்டு, அவர்கள் தீயை அணைத்ததால், தற்காலிகமாக ஒரு பேரழிவு தடுக்கப்பட்டுள்ளது.

விஸ்கோஸ் ஆலையின் நச்சுக் கழிவுகளால் பவானி ஆறு, சுற்று வட்டாரத்திலுள்ள விளை நிலம், நிலத்தடி நீர் அனைத்தும் நஞ்சாகி விட்டது. சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் இப்பயங்கரவாதத்திற்கு எதிராக மக்கள் தொடர்ந்து போராடியும் பலனில்லை. 2001 முதல் சட்ட விரோதமாக மூடப்பட்டுக் கவனிப்பாரின்றி கிடக்கும் ஆலையினுள் உள்ள 201 டன் கார்பன்-டை-சல்பைடு அமிலம், 700 டன் கந்தக அமிலம், 700 டன் கந்தகம் ஆகியவை எவ்விதப் பாதுகாப்புமின்றி கொள்கலன் தொட்டிகளில் கொட்டிக் கிடக்கின்றன.

பூட்டிக் கிடக்கும் ஆலையினுள் சமூக விரோதிகள் புகுந்து திருடுவது தொடர்ந்து நடக்கிறது. அவ்வப்போது லாரியில் வந்து மொத்தமாக திருடிச் செல்வதும் நடக்கிறது. இதில் விசேசம் என்னவென்றால், ஆலை வாயிலுக்கு எதிரில்தான் சிறுமுகை போலீசு நிலையமும் உள்ளது. சில நேரங்களில், தவிர்க்க முடியாத சூழலில் மட்டுமே திருடுபவர்கள் கைதாவதும் வழக்குப் பதிவதும் நடக்கும். திருட்டுக் கும்பலுக்கும் போலீசு துறைக்கும் தொடர்புண்டு எனப் பகுதி மக்கள் வெளிப்படையாகவே குற்றஞ் சுமத்துகின்றனர்.

இத்தகைய அபாயகரமான சூழலில் நச்சு இரசாயனப் பொருட்களை அப்புறப்படுத்த வேண்டும் எனப் பகுதிவாழ் மக்கள் ஆலை முன்பும், வழக்கறிஞர்கள் சங்கத்தினர் மேட்டுப்பாளையம் நகரிலும் சாலைமறியல் போராட்டங்களை நடத்தினார்கள்.

அதன்பின் நச்சு இரசாயனப் பொருட்கள் ஏலம் விடப்பட்டு, ஒரு பகுதி மட்டுமே அப்புறப்படுத்தப் பட்டது. இன்னும் 185 டன் கார்பன்-டை-சல்பைடு அமிலமும், 140 டன் கந்தகமும், 50 டன் கந்தக அமிலமும் ஆலையினுள் இருக்கின்றன.

தீப்பிடித்த சம்பவத்தன்று பல கோடி மதிப்புள்ள பொருட்களைத் திருடிய சமூக விரோதிகள், மக்களின் கவனத்தைத் திசை திருப்பவே கந்தகக் கழிவில் தீ வைத்துள்ளனர். தப்பித்தவறி கார்பன்-டை-சைல்பைடு டேங்கில் தீப் பிடித்திருந்தால் சிறுமுகையும் அதைச் சுற்றியுள்ள 5 கி.மீ சுற்றளவு பகுதியும் பேரழிவுக்கு உள்ளாகியிருக்கும்.

இப்படிப்பட்ட அபாயம் தொடராமலிருக்கவும், தீ வைத்த சமூக விரோதிகளைக் கைது செய்யக் கோரியும், அபாயகரமான இரசாயனப் பொருட்களை உடனே அப்புறப்படுத்தக் கோரியும் விஸ்கோஸ் ஆலை முன்பு 16.8.05 அன்று காலையிலிருந்தே குவிந்த மக்கள் சாலை மறியல் போராட்டத்தைத் தொடங்கினர். திருடர்கள், சமூக விரோதிகளுடன் கூட்டாளியாயுள்ள போலீசோ, விஸ்கோஸ் முதலாளியின் பொறுப்பின்மையை தட்டிக் கேட்க வக்கற்ற அதிகாரிகளோ மக்களை விரட்டியடிக்கவே முயற்சித்தனர்.

தீர்வு ஏற்படாதவரை சாலை மறியலைக் கைவிட மறுத்த மக்கள் மீது பாய்ந்த போலீசு, 21 ஆண்கள், 23 பெண்களைக் கைது செய்து பொய் வழக்குப் போட்டுச் சிறையிலடைத்தது. "உயிருக்கு உத்தரவாதம் கேட்ட மக்களுக்குச் சிறையா?" எனக் கொதித்தெழுந்த சிறுமுகை நகரமே 17.8.05 அன்று கடையடைப்புப் போராட்டம் நடத்தியது. அன்று மாலையே சிறையிலடைக்கப்பட்ட 44 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். ஆனாலும், கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால், மரணபயத்தில் பலரும் இப்பகுதியை விட்டு வெளியேறிக் கொண்டுள்ளனர்.

செயற்கை நூலிழை தயாரிக்கும் விஸ்கோஸ் ஆலை முதலாளி லாப வெறி பிடித்து நீர், நிலம், காற்று என அனைத்தையும் நஞ்சாக்கி விட்டான்.

மூடிக் கிடக்கும் சவுத் இண்டியா விஸ்கோஸ் ஆலையில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழலை நஞ்சாக்கும் உயிர்க்கொல்லி இரசாயனப் பொருட்களை உடனடியாக அப்புறப்படுத்தக் கோரி சிறுமுகை நகரில், அப்பகுதி மக்கள் குடும்பத்தோடு நடத்திய ஆர்ப்பாட்டம்: உயிர் வாழும் உரிமைக்கான போர்!





படிப்பகம்

5000 பேருக்கும் மேல் வேலை செய்த ஆலையைச் சட்டவிரோதமாக மூடியது மட்டுமின்றி அபாயகரமான இரசாயனப் பொருட்களையும் அப்புறப்படுத்தாமல் உள்ளான். இன்னும் வேலையிழந்த தொழிலாளர்களுக்குரிய சேமிப்புப் பணத்தைக் கூடத் தராமல் இருக்கிறான். நலிவடைந்த ஆலை என நட்டக் கணக்கெழுதி அரசுக்கும் தொழிலாளர்களுக்கும் பட்டை நாமம் சாத்தி விட்டான். இப்போது பொது மக்களின் உயிருக்கும் எமனாகி வருகிறான். இதை தட்டிக் கேட்க துப்பு கெட்ட போலீசும் அதிகாரிகளும் மக்கள் மீது பாய்ந்து குதறுகின்றனர்.

பெருநகரங்களில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கப் போவதாகக் கூறிக் கொண்டு குப்பை கொட்டும் போது மக்கும் குப்பை, மக்காத குப்பை எனப் பிரித்துப் போடாவிட்டால் அபராதம் என மிரட்டுகிறார்கள் ஆட்சியாளர்கள். ஆனால், அபாயகரமான இரசாயனப் பொருட்களை கொட்டி, நிலம், நிலத்தடி நீர், ஆறு அனைத்தையும் நஞ்சாக்கி விட்டு பொது மக்களின் உயிரோடு விளையாடுகிற விஸ்கோஸ் முதலாளி மீது மட்டும் நடவடிக்கை இல்லையே! ஏன்? சட்டமும், நீதியும், போலீசும் யாருக்கானது என்பதையும், இனி தொடர்ந்து போராடாமல் வாழ்வில்லை என்பதையும் இந்நிகழ்ச்சி மீண்டும் நிரூபித்துக் காட்டி விட்டது.

**- பு.ஜ. செய்தியாளர், கோவை.**

## மக்கள் கண்காணிப்பகத்தின் மகாத்மியம்

# ஊருக்கு நீதி; ஊழியருக்கு அநீதி!

'மக்கள் கண்காணிப்பகம்' என்ற ஏகாதிபத்திய கைக்கூலி நிறுவனத்தை அம்பலப்படுத்தி பு.ஜ. இதழில் ஆதாரத்தை வெளியிடும் போதே, ''இதற்கும் சேர்த்து அப்பாவி ஊழியர்களைச் சித்திரவதை செய்யும் முன், முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முடியுமா என்பது பற்றி சிந்தியுங்கள், ஹென்றி டிபேன்'' என்று முடித்திருந்தோம். நாம் சொன்னது போலவே, ஊழியர்களிடம் விசாரணைகளும் பழிவாங்கல்களும் தொடங்கி விட்டன. பு.ஜ. எழுதியவை பொய் என்றால், ஒரு ஆதாரத்தை வெளியிட்டதுமே அரண்டு போயிருப்பது எதற்காக?

மோகன் குமார் என்பவர் 15.9.04 முதல் ஹென்றி டிபேனிடம் ஓட்டுனராகப் பணி புரிந்து வந்தார். வேலையில் சேரும் போதே ஓட்டுநர் உரிமத்தை வாங்கி வைத்துக் கொண்டார் ஹென்றி டிபேன். மக்கள் கண்காணிப்பகம் நடத்திய கலை இரவு நிகழ்ச்சியின்போது, மோகன் குமார் ம.க.இ.க. தோழர்களிடம் பேசியதைப் பார்த்து விட்டு, அவரிடம் விசாரணை செய்துள்ளார், திருவாளர் ஹென்றி டிபேன்.



ஓட்டுநர் உரிமத்தைத் தராமல் இழுத்தடித்து, ஹென்றி டிபேனால் பழிவாங்கப்பட்ட ஓட்டுநர் மோகன்குமார்.

தான் பேசும் போது யாரும் எதிர்த்துப் பேசக் கூடாது என பண்ணையார்த்தனமாக நடந்து கொள்ளும் ஹென்றி டிபேனுக்கு, விசாரணையின் போது சுயமரியாதைமிக்க மோகன் குமார் அளித்த பதில்கள் ஆத்திரமூட்டியுள்ளன. இதன்பின் மோகன் குமாரைத் தொடர்ந்து இழிவுபடுத்தத் தொடங்கினார், ஹென்றி டிபேன்.

13.7.05 முதல் தொடர்ந்து வீட்டிற்குக் கூடப் போகாமல் புதுக்கோட்டை - நாகமலையில் இரவு பகலாக வேலை செய்தார் மோகன் குமார். 15-ஆம் தேதி அதிகாலை 5 மணி முதல் வேலை செய்தவர், 9 மணிக்கு காலை உணவைச் சாப்பிடத் தொடங்கினார். அவரை அழைத்த ஹென்றி டிபேன், வேலை நேரத்தில் எப்படி சாப்பிடலாம் என இழிவுபடுத்தியதைச் சகித்துக் கொள்ள முடியாமல் மோகன் குமார் பதில் கூறவே, அவரைக் கேவலமாகத் திட்டி, ஓடு என விரட்டிவிட்டார்.

சுயமரியாதை இழந்து வேலை செய்ய தயாரில்லாத மோகன் குமார், வேலையை விட்டு விலகி விட்டு, ஓட்டுநர் உரிமத்தையும், சம்பளத்தையும் கேட்க, இன்று வரை தர மறுக்கிறார் 'மனித உரிமை'க் காவலர் ஹென்றி டிபேன். ஓட்டுனர் உரிமம் இன்றி வேறு வேலைக்குப் போவதோ, குடும்பத்தைப் பராமரிப்பதோ சிரமம் எனத் தெரிந்தே இப்படி அடாவடி செய்வது அப்பட்டமான மனித உரிமை மீறல் அல்லவா? இடையில் திராவிடர் கழக வழக்கறிஞர் திரு.மகேந்திரன் மூலம் பேசியும் தராததால், தற்போது மதுரை மனித உரிமைப் பாதுகாப்பு மையம் மூலம் சட்ட நடவடிக்கை எடுத்து வருகிறார், மோகன் குமார்.

இதேபோல, அமுதா என்ற பெண் ஊழியரை ''பு.ஜ.விற்கு புகைப்படம் கொடுத்தவர் இவர்தான்'' என சக ஊழியர்கள் மத்தியில் வைத்து இழிவுபடுத்தியுள்ளார். இதை மறுத்த அமுதா, அழுது கொண்டே அலுவலகத்தை விட்டு வெளியேறியவர், இன்று வரை வேலைக்குத் திரும்பவில்லை. ஒரு அப்பாவிப் பெண்ணை இப்படி நான்கு பேர் மத்தியில் கேவலப்படுத்துவது சித்திரவதையல்லவா?

சராசரி மனிதாபிமான அடிப்படையில், அப்பெண்ணுக்கு என்ன ஆனதோ என பார்க்கச் சென்ற ராபர்ட் (வழக்கறிஞர்), வின்சென்ட் (உயர்நீதி மன்ற வழக்கறிஞர்), முருகப்பன் என்ற மூவரையும் இடை நீக்கம் செய்துள்ளார் ஹென்றி டிபேன். அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போல ஹென்றி டிபேன் கண்களுக்கு எல்லோருமே ம.க.இ.க.காரர்களைப் போல் தெரிகிறது. பின்னர், ராபர்ட்டை வேலையை விட்டே நீக்கிவிட்டார். தற்போது மக்கள் கண்காணிப்பகத்தில் யாரும் யாரோடும் பேசக் கூடாது, பழகக் கூடாது, ''சீட்''டைவிட்டு நகரக் கூடாது எனப் பல கட்டுப்பாடுகள் போட்டுள்ளார்.

பு.ஜ. அவதூறு செய்கிறதென்றால் அதை மக்கள் முன் மறுத்து உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டியதுதானே! அதைவிடுத்து யாரிடமிருந்து செய்தி கசிந்தது என்று ஊழியர்களிடம் விசாரணைகள் எதற்கு? சதிகாரர்களும் கைக்கூலிகளும் தனது நிழலைக் கூட கண்டு அஞ்சுவார்கள் என்பதையே திருவாளர் ஹென்றி டிபேனின் நடவடிக்கைகள் நிரூபித்துக் காட்டுகின்றன. சக ஊழியர்களிடமே மனித உரிமையையும் ஜனநாயகத்தையும் மதித்து நடக்காத இந்தக் கும்பல், மனித உரிமை பற்றி சவடால் அடிக்க கொஞ்சமாவது அருகதை இருக்கிறதா?

**— பு.ஜ. செய்தியாளர்கள், மதுரை.**

www.padippakam.com

**தண்ணீரைத் தனியார்மயமாக்காதே! தண்ணீரை வியாபாரமாக்காதே!**

# ஏகாதிபத்திய குறியீடு 'கோக்'கிற்கு எதிராக தமிழகம் தழுவிய வீச்சான இயக்கம்

நெல்லை - கங்கை கொண்டானில் கொக்கோ கோலா ஆலை நிறுவப்படவுள்ளதை எதிர்த்து மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து செப்.12-ஆம் தேதியன்று மறியல் போராட்டத்தை நடத்தவுள்ளன. இப்போராட்டத்தை விளக்கி தமிழகமெங்கும் இவ்வமைப்புகள் கடந்த இரு மாதங்களாக வீச்சாகப் பிரச்சாரம் செய்து வருகின்றன.

நாடு மீண்டும் காலனியாக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த அமைப்புகள் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து தமிழக மக்களிடம் எச்சரிக்கை செய்து வருவதோடு, மறுகாலனியாதிக்கத்துக்கு எதிரான போராட்டங்களையும் நடத்தி மக்களை அணிதிரட்டி வந்துள்ளன. இறால் பண்ணை அழிப்புப் போராட்டம், தேக்குப் பண்ணை அழிப்புப் போராட்டம், அமெரிக்க மான்சாண்டோ விதைக் கம்பெனிக்கு எதிரான போராட்டம், நெய்வேலி மின்நிலையத்தை அமெரிக்கக் கம்பெனிக்கு விற்க முயற்சிப்பதை எதிர்த்த போராட்டம் ஆகியன இவ்வமைப்புகள் நடத்திய குறிப்பிடத்தக்க போராட்டங்களாகும்.

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையின் பெயரால், நம் நாட்டின் தொழிலும் விவசாயமும் நாசமாக்கப்பட்டு வருவதோடு, அனைத்து இயற்கை மூல வளங்களும் பன்னாட்டுக் கம்பெனிகளுக்குத் தாரை வார்க்கப்பட்டு வருகிறது. இப்போது, ஆறு, குளம், ஏரி முதலான நீராதாரங்களும் குடிநீர் விநியோகமும் பன்னாட்டுக் கம்பெனிகளிடமும் தரகுப் பெருமுதலாளிகளிடமும் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாகவே அமெரிக்க கோக் நிறுவனத்துக்கு தாமிரவருணி நீரை வரைமுறையின்றி உறிஞ்சிக் கொள்ள தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் விளைவாக தாமிரவருணி ஆறு கட்டாந்தரையாகிப் போகும்; நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்கள் நீரின்றிப் பாலைவனமாகிப் போகும். இப்பேரழிவைத் தடுக்கவே இம்மறியல் போராட்டம்.

இது வெறுமனே அமெரிக்க கோக் நிறுவனத்துக்கு எதிரான போராட்டமல்ல. தண்ணீரைத் தனியார்மயமாக்கி, வியாபாரச் சரக்காக்கும் மக்கள் விரோதக் கொள்கைக்கு எதிரான போராட்டம். நமது நாட்டின் நீராதாரங்களைக் கைப்பற்றி நாட்டையே முழுமையாக அடிமையாக்க வரும் ஏகாதிபத்தியவா

''அமெரிக்க 'கோக்'கை அடித்து விரட்டுவோம்!'' - பிரச்சார இயக்கத்தையொட்டி புரட்சிகர அமைப்புகள் வெளியிட்டுள்ள கருத்துப் படங்கள் (மேலே); நெல்லையில் காட்சிக்கு வைக்கப்பட்ட கருத்துப்படங்களைப் பார்வையிடும் பொதுமக்கள்.






www.padippakam.com

திகளுக்கு எதிரான போராட்டம். கோக் நிறுவனம், வியாபார நிறுவனம் மட்டுமல்ல; இது அமெரிக்க ஆக்கிரமிப்பின் அடையாளம். இதனை தமிழக மக்கள் அனைவரும் உணரும் வகையில் கடந்த இரு மாதங்களாக பல்வேறு வடிவங்களில் இவ்வமைப்புகள் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்கள், வட்ட நகரங்கள், சுற்றுலா - வழிபாட்டுத் தலங்கள் என மக்கள் கூடுமிடங்களில் எல்லாம் இவ்வமைப்புகள் எடுப்பாக சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்துள்ளன. முழக்கங்களும் கருத்துப் படங்களும் கொண்ட இச்சுவரெழுத்துக்கள் தமிழகம் மட்டுமின்றி, அண்டை மாநிலமான கேரளத்தின் தலைநகர் திருவனந்தபுரத்தில் மலையாள மொழியிலும், கர்நாடகத் தலைநகர் பெங்களூரில் கன்னட மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் சென்னை, மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ஆங்கிலத்திலும் இச்சுவரெழுத்துக்கள் அமைந்துள்ளன.



திருச்சி - உறையூர் குறத் தெருவில் நடந்த விளக்கப் பொதுக்கூட்டத்தில் ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி.

சுவரெழுத்து விளம்பரங்கள் சிலவற்றை ஒருசில ஓட்டுக்கட்சிகளும் ரசிகர் மன்றத்தினரும் அழித்துள்ளனர். அவை இப்புரட்சிகர அமைப்புகளால் விசாரிக்கப்பட்டு, அழித்தவர்களே தவறுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் எழுதிக் கொடுத்துள்ளனர். விழுப்புரத்திலிருந்து பாண்டிச்சேரி செல்லும் நெடுஞ்சாலையில் மதகடிப்பட்டு கிராமத்தில் எழுதப்பட்ட சுவரெழுத்தை

# 'கோக்'கின் அடியாள்படையாக தமிழக போலீசு

"தாமிரவருணியை உறிஞ்சவரும் அமெரிக்க 'கோக்'கை அடித்து விரட்டுவோம்!" என்ற முழக்கத்துடன் தண்ணீரைத் தனியார்மயமாக்கும் மறுகாலனியாதிக்கக் கொள்கையை எதிர்த்து புரட்சிகர அமைப்புகள் நடத்திவரும் பிரச்சார இயக்கத்தைத் தடுக்க, நெல்லை மாவட்ட போலீசுத்துறை கீழ்த்தரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பொதுக் கூட்டங்களுக்கு மட்டுமின்றி, தெருமுனைக் கூட்டங்கள், தட்டுவண்டிப் பிரச்சாரம் முதலானவற்றும் அனுமதி மறுத்து அடாவடித்தனம் செய்து வருகிறது, நெல்லை போலீசு.

இந்த இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், நெல்லை மாவட்டத்தின் கிராமங்கள் தோறும், ஒலிபெருக்கி பயன்படுத்த அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து தோழர்கள் பிரச்சாரம் செய்து வருகின்றனர். நெல்லை நகரின் இரண்டு பேருந்து நிலையங்களிலும் தினமும் காலை முதல் மாலை வரை துண்டறிக்கைகளை விநியோகித்தும் அரசு அலுவலகங்கள், கல்லூரிகள், கடைவீதிகள் - என மக்கள் கூடுமிடங்களில் எல்லாம் இவ்வியக்கத்தையொட்டி வெளியிடப்பட்டுள்ள கருத்துப்படங்கள் - கேலிச் சித்திரங்களைக் காட்சிக்கு வைத்தும் மக்களிடம் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் மறியல் போராட்டத்தை விளக்கி 50,000-க்கும் மேற்பட்ட துண்டறிக்கைகள் நெல்லை மாவட்ட மக்களிடம் விநியோகிக்கப்பட்டுள்ளன. "தண்ணீர்: தாகத்திற்கா, இலாபத்திற்கா?" என்ற சிறு வெளியீடு ஆயிரக்கணக்கில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நெல்லை - பாளையங்கோட்டை வட்டாரத்தில் மட்டும் 100-க்கும் மேற்பட்ட பெரிய அளவிலான சுவரெழுத்துப் பிரச்சாரத்தை இவ்வமைப்புகள் செய்துள்ளன.

இவற்றைக் கண்டு பீதியடைந்த போலீசு, இப்பிரச்சார இயக்கத்தை முடக்கும் வகையில் அரசு சுவர்களில் செய்யப்பட்டிருந்த சில சுவரெழுத்து விளம்பரங்களை தானே நேரில் சென்று அழித்துள்ளது. சுவரெழுத்துக்களைப் புகைப்படமெடுத்து, 'குடியரசு'த் தலைவரையும் நீதிபதிகளையும் அரசியல் கட்சித் தலைவர்களையும் பிரதமரையும் மாநில முதல்வரையும் இச்சுவரெழுத்துக்கள் இழிவு படுத்துவதாகவும், தீவிரவாதத்தைத் தூண்டுவதாகவும், எனவே தேசத்துரோக குற்ற பிரிவுகளின்கீழ் இவ்வமைப்பினரைக் கைது செய்ய வேண்டும் என்று நெல்லை குற்றவியல் நடுவர் மன்றத்தில் மாவட்டப் போலீசுத்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது.

மேலும், நெல்லை ஜங்ஷன் பேருந்து நிலையத்தின் காவல் உதவி மையத்தில் உள்ள ஒலிபெருக்கி மூலம், "கோக் ஆலைக்கு எதிராக நக்சல்பாரிகள் பிரச்சாரம் செய்கிறார்கள். இவ்வாறு பிரச்சாரம் செய்பவர்களைப் பொதுமக்கள் பார்த்தால், காவல்துறையிடம் பிடித்துக் கொடுங்கள்!" என்று போலீசார் கோக்கிற்கு ஆதரவாக வெளிப்படையாகவே பிரச்சாரம் செய்துள்ளனர். போலீசு கொடுத்த அறிக்கையை அப்படியே வாந்தியெடுத்து பீதியூட்டி செய்தி வெளியிட்டுள்ளது தினகரன் நாளேடு.

சட்டப்படி இந்தியக் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கருத்துரிமை - ஜனநாயக உரிமைகளை நசுக்கும் போலீசின் அடாவடித்தனத்தைக் கண்டித்தும், அமெரிக்க 'கோக்'கிற்கு நெல்லை போலீசு அடியாளாகச் செயல்படுவதை அம்பலப்படுத்தியும் இப்புரட்சிகர அமைப்புகள் மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளன. போலீசின் அச்சுறுத்தல் - அடாவடித்தனங்களைக் கண்டு அசராமல் இவ்வமைப்புகளின் தோழர்கள் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு வருகின்றனர் •


படிப்பகம்

www.padippakam.com

தி.மு.க.வினர் அழித்துவிட்டதும், சம்பந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கேட்டு அவர்கள் வருத்தம் தெரிவித்த பின், மீண்டும் தோழர்கள் எழுத முற்பட்டபோது, புதுவை எம்.எல்.ஏ. சிவாவின் மைத்துனரான மகேஷ், தனது அடியாள்படையுடன் வந்து மிரட்டிப் பார்த்தும் தோழர்கள் உறுதியாக நிற்கவே, ஆய்வாளர் உள்ளிட்ட 4 போலீசாரை அழைத்துக் கொண்டு வந்து பூச்சாண்டி காட்டிப் பார்த்தார். ஆனால், உண்மை அம்பலமானதும் பொதுமக்கள் முன்னிலையிலேயே தவறுக்கு வருத்தம் தெரிவித்து, தி.மு.க. மாநாடு முடிந்தவுடன் மீண்டும் எழுதித் தர ஒப்புக் கொண்டார். எங்களை யாரும் ஆட்டவோ அசைக்கவோ முடியாது என்று திமிராக வலம் வந்து சுவரெழுத்துக்களை அழித்தவர்கள், புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரத்துக்கு மக்களிடம் பேராதரவு இருப்பதையும், தோழர்களின் உறுதியையும் கண்டு பின்வாங்கிக் கொண்டுள்ளனர்.



நெல்லையில் நடந்த விளக்கப் பொதுக்கூட்டத்தில் அமெரிக்காவின் பெரியண்ணன்தனத்தை கிண்டலடிக்கும் நையாண்டி நாடகம்.

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், பேருந்து நிலையம், அரசு அலுவலகம், மக்கள் கூடும் சந்தை என அனைத்து இடங்களிலும், வண்ண ஓவியங்களுடன் பிரச்சாரத் தட்டிகளை இவ்வமைப்பினர் வைத்துள்ளனர். நவீன டிஜிட்டல் தட்டிகள் பல இடங்களில் உள்ளன. தண்ணீருக்கு மக்கள் படும் துயரம், அதேநேரத்தில் தண்ணீரை தானமாக வெளிநாட்டு கம்பெனிக்கு தாரைவார்க்கும் பிரதமரை அம்பலப்படுத்தும் கேலிச் சித்திரங்களைக் கொண்ட ஓவியக் காட்சிகளாக, மக்கள் கூடும் இடங்களிலெல்லாம் நடத்துகின்றனர்.

நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட துண்டறிக்கைகள், ரூ. 5 விலையில், சிறு வெளியீடு 55,000 பிரதிகள் - என மக்கள் மத்தியில் விநியோகித்துள்ளனர். சிறு வெளியீட்டை நீதிபதிகள், காவல்துறை அதிகாரிகள், நடுவர்மன்ற நடுவர்கள், அரசு அலுவலகங்கள், கல்லூரிகள் - என பல இடங்களிலும் விற்பனை செய்துள்ளனர்.

ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் முதல் 10 நாட்களில், தமிழகத்தின் எல்லாப் பேருந்து நிலையத்திலும் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனர். மக்கள்

# நெருப்பைப் பொட்டலம் கட்ட முயற்சிக்கும் போலீசு

“நக்சல்பாரி” என்ற வார்த்தையைக் கூட தருமபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட எல்லைக்குள் உச்சரிக்கக் கூடாது என்று உத்தரவு போட்டு வரும் போலீசுத்துறைக்குப் பெரும் சவாலாக அமைந்தது, புரட்சிகர அமைப்புகளின் சுவரெழுத்துக்கள். “தண்ணீரைத் தனியார்மயமாக்காதே! தண்ணீரை வியாபாரமாக்காதே! தாமிரவருணியை உறிஞ்சவரும் அமெரிக்க ‘கோக்’கை அடித்து விரட்டுவோம்! நக்சல்பாரி பாதையில் அணிதிரள்வோம்!” என்று தருமபுரி மாவட்ட நெடுஞ்சாலைகளில் கொட்டை எழுத்துக்களைக் கொண்ட சுவரெழுத்துக்களைக் கண்டு போலீசுத்துறை ஆத்திரமடைந்தது. கடந்த 24.6.05 அன்று அதியமான் கோட்டை போலீசார், வி.வி.மு.; பு.மா.இ.மு. அமைப்புகளைச் சேர்ந்த 4 முன்னணித் தோழர்களை ‘தீவிரவாதிகள் - பயங்கரவாதிகள்’ என்று குற்றம் சாட்டி பொய் வழக்கு சோடித்து கைது செய்தது.

தர்மபுரி குற்றவியல் நீதிமன்றமும், மாவட்ட அமர்வு நீதிமன்றமும் இத்தோழர்களுக்குப் பிணை வழங்க மறுத்ததால், அவர்கள் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். சென்னை உயர்நீதிமன்றமும் பிணை வழங்க மறுத்து, பின்னர் இருமாத காலமாக நீண்ட போராட்டத்திற்குப் பிறகே பிணை வழங்கி தோழர்களை விடுதலை செய்தது.

முன்னணியாளர்களைக் கைது செய்து அடக்குமுறையை ஏவுவதன் மூலம் பிரச்சார இயக்கத்தை முடக்கிவிடலாம் என்று இறுமாந்திருந்த போலீசுக்கு, தமது சோர்வில்லாப் பிரச்சாரத்தின் மூலம் அமைப்பின் இதர தோழர்கள் பதிலடி கொடுத்தனர். துண்டறிக்கைகள் மூலம் வீடுவீடாகப் பிரச்சாரம் செய்த தோழர்கள் 17.8.05 அன்று தருமபுரி நகரின் மையப் பகுதியில் நெல்லையில் நடைபெறவுள்ள மறியல் போராட்டத்தை அறிவிக்கும் மிகப் பெரிய விளம்பரத் தட்டியைக் கட்டினர். அதிலும் கொட்டை எழுத்தில் “நக்சல்பாரி” என்ற வார்த்தை இருக்கவும், பீதியடைந்த உள்ளூர் போலீசு ஆய்வாளர், அதிரடிப் படை போலீசாருக்குத் தகவல் கொடுத்து, “உடனடியாக இத்தீவிரவாதிகளைக் கைது செய்யுங்கள்” என்று கோரினர்.

அதன்படி, சிறிது நேரத்தில் வாகனங்களில் சீறிக் கொண்டு வந்த அதிரடிப் படையினர் 22 பேர், தோழர்களையும் விளம்பரத் தட்டிகளையும் பார்த்து, “இந்த விளம்பரம் தமிழகமெங்கும் இருக்கிறதே! இதுல எங்கே தீவிரவாதம் இருக்கு?” என்று உள்ளூர் போலீசிடம் கேட்டனர். அதிரடிப்படை ஆய்வாளரோ “இது தீவிரவாதமல்ல; இவர்கள் தீவிரவாதிகளுமல்ல; இவர்களை தீவிரவாத சட்டப்பிரிவின் கீழ் நான் கைது செய்யவும் மாட்டேன். இந்த மாதிரியான சாதாரண விவகாரங்களுக்கெல்லாம் எங்களைக் கூப்பிடக் கூடாது” என்று உள்ளூர் போலீசிடம் கூறிவிட்டு, போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் தட்டியைக் கட்டுங்கள் என்று தோழர்களுக்கு ஆலோசனை கூறிவிட்டுச் சென்றார். சூரத்தனம் காட்டிய உள்ளூர் போலீசோ, மேலிடத்துக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் விக்கித்து நிற்கிறது. •



படிப்பகம்

www.padippakam.com




தமிழகமெங்கும் செய்யப்பட்டுள்ள சுவரெழுத்துப் பிரச்சாரத்தின் ஒரு மாதிரி (இடம்: உடுமலை பேருந்து நிலையம்).

தங்களால் இயன்ற நிதியை இவர்களுக்கு வழங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தினசரி மாலை நேரங்களில், மக்களை வீடு வீடாக சென்று சந்திப்பது, தெருமுனைச் சந்திப்புகளில் நின்று பிரச்சாரம் செய்வது போன்ற வடிவங்களில், லட்சக்கணக்கான மக்களிடம், தங்களின் கருத்தைக் கொண்டு சென்றுள்ளனர். மேலும், தட்டு வண்டி, ஆட்டோ போன்ற வாகனங்களில், ஓவியங்களைக் காட்சிக்கு வைத்து, மக்கள் கூடும் இடங்களில் நிறுத்தி பிரச்சாரம் மேற்கொண்டுள்ளனர்.

உளுந்தூர்பேட்டை, ஆம்பூர், போன்ற இடங்களில், தேசிய நெடுஞ்சாலையில் இருப்புப் பாதை சந்திப்புகளில் நின்று போகும் வாகனங்களை நிறுத்தி துண்டறிக்கைகள் - வெளியீடுகள் விநியோகித்துள்ளனர். வாகனங்களில் வந்தவர்கள் கருத்துக்களை ஆதரித்து நன்கொடையும் வழங்கியுள்ளனர்.

கடலூர், விழுப்புரம், ஒசூர், சேலம், பாளையங்கோட்டை, விளாத்திகுளம், கரூர், காங்கேயம், அதிராம்பட்டினம், சிவகங்கை, சென்னை, திருச்சி, அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களில் கலை நிகழ்ச்சி - நாடகங்களுடன் பொதுக் கூட்டம் நடத்தியுள்ளனர். ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும் 1000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

போராட்டக் களமான நெல்லை

# ஊழலில் கொடிகட்டிப் பறக்கும் உடுமலை நகராட்சி

**கோ**வை மாவட்டத்திலுள்ள உடுமலைப்பேட்டை, பஞ்சாலைத் தொழிலுக்கு பெயர் பெற்ற நகரம். இந்நகராட்சியின் ஆணையாளரான திரு.கே.ஆர். செல்வராசு அவர்கள் இலஞ்ச, ஊழல், அதிகார முறைகேடுகளுக்கும் பெயர் பெற்ற நகராட்சியாக, இதை மாற்றிய 'பெருமை'க்குரியவர் என்றால் மிகையல்ல.

நகராட்சி ஊழியர்கள், தனது வீட்டின் எல்லா வேலைகளையும் செய்வதற்காகவே நியமிக்கப்பட்டவர்கள்! நகராட்சி வாகனங்கள், தனது குழந்தைகள் பள்ளி சென்று வரவும் தனது மனைவி-உறவினர்கள் கோயில் குளங்களுக்குச் சென்று வருவதற்காக மட்டுமே வாங்கப்பட்டவை! வீட்டு வரியா? புதிய வீட்டுமனை அங்கீகாரமா? பால் விற்பனையா? குடிநீர் குழாய் இணைப்பா? சாலை, சாக்கடை கட்டுமானப் பணிகளா? நகராட்சி ஒப்பந்தப் பணிகளா? இன்னும் இன்னும் என்னென்ன வழிகளிலெல்லாம் இலஞ்ச, ஊழலும் அதிகார முறைகேடுகளும் செய்ய முடியுமோ அவ்வளவையும் திறமையுடன் செய்து வருபவர்தான் ஆணையாளர் திரு.செல்வராசு அவர்கள்!

இந்த ஊழல், முறைகேடுகளை அம்பலப்படுத்தி புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, விடிவெள்ளி நுகர்வோர் நல மன்றம் ஆகிய அமைப்புகள் சார்பாக கேலிச் சித்திரத்துடன் கூடிய தட்டி ஒன்று ஆகஸ்ட் 1-ம் தேதி நகராட்சி முன்புறம் கட்டப்பட்டது. அதைக் கட்டிய ஒரு சில மணி நேரங்களிலேயே ஆணையாளர் உத்தரவின் பேரில் திருடப்பட்டு, மறைத்து வைக்கப்பட்டது. பு.ஜ.தொ.மு. தோழர்கள் இருவர் தட்டி பற்றி நகராட்சி அதிகாரிகளிடம் விசாரித்துக் கொண்டிருக்கும் போதே வரவழைக்கப்பட்ட போலீசு, தோழர்களைக் கண்டதுமே, மிரட்ட வந்ததைக் கைவிட்டுத் திரும்பச் சென்றுவிட்டனர். அதுவரை இப்படி தட்டி கட்டலாமா எனப் பேசிய அதிகாரிகள், தட்டியைத் தாங்கள் எடுக்கவே இல்லை எனக் கூறிவிட்டனர். 3-ஆம் தேதி தட்டி படத்துடன், ஆணையரின் யோக்கியதையை அம்பலப்படுத்தி ஒட்டப்பட்ட சுவரொட்டிகளையும் தேடித்தேடிக் கிழிக்க ஆட்களை ஏவினார் ஆணையாளர்.

மறுபுறம், ஆணையாளரே பேச்சு வார்த்தைக்குத் தூது விட்டுப் பார்க்கிறார். பு.ஜ.தொ.மு. சார்பாக பல்வேறு பிரச்சினைகளையொட்டி பொதுக்கூட்டம் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கேட்டால், சட்டம் - ஒழுங்கு சீர்கெடும் என போலீசு அனுமதி மறுத்து வருகிறது. போலீசின் இந்த ஜனநாயக மறுப்பை அம்பலப்படுத்தியும், சட்ட - ஒழுங்கு சீர்கேட்டிற்கு யார் காரணம் என்பதை அம்பலப்படுத்தியும் பெரிய சுவரொட்டிகள் நகரெங்கும் ஒட்டப்பட்டன. போலீசின் ஜனநாயக விரோத போக்கிற்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

இந்த சம்பவங்களுக்குப் பின் நகராட்சி ஆணையாளர் நகராட்சி வாகனங்களை வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்துவதில்லை. மக்களிடையேயும், இந்த அம்பலப்படுத்தும் இயக்கத்திற்கு ஆதரவு பெருகி வருகிறது.

உடுமலை நகராட்சி ஆணையாளரின் ஊழல் - முறைகேடுகளை அம்பலப்படுத்தி வைக்கப்பட்ட தட்டி.



*- பு.ஜ. செய்தியாளர்*
*உடுமலை.*


படிப்பகம்

www.padippakam.com

மாவட்டத்தில், மேற்கண்ட வடிவங்கள் அனைத்திலும், வீச்சான பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனர்.

இப்பிரச்சாரங்களை கண்டு பீதியடைந்த தமிழக போலீசுத்துறை, இந்த அமைப்புகள் மீது 'தீவிரவாதிகள்' என்ற முத்திரையைக் குத்தி மக்களைப் பீதியூட்டும் வகையில் தினசரி பத்திரிக்கைகள் வாயிலாக எதிர்ப்பிரச்சாரத்தை நெல்லை மாவட்டத்தில் செய்து வருகிறது. பொதுக் கூட்டங்கள், தெரு முனைக் கூட்டங்கள், வாகனப் பிரச்சாரங்கள் ஆகியவற்றுக்குத் தடைவிதித்து பிரச்சாரத்தின் வேகத்தை முடக்க முயற்சித்து வருகிறது.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடி, வீர மரணம் தழுவிய வீரபாண்டிய கட்டபொம்மன், பூலித்தேவன், கப்பலோட்டிய தமிழன், வ.உ.சி. போன்றவர்கள் தோன்றிய மண் தாமிரவருணி மண். அதன் பாரம் பரியத்தைக் காக்கும் போராட்டம், செப்.12 நடக்கும் மறியல் போராட்டம்.

இப்போராட்டத்தை காக்கிச் சட்டைகளின் அச்சுறுத்தல், பீதியூட்டல், மற்றும் கைது போன்ற அடக்குமுறைகளால் ஒடுக்கி விடமுடியாது என சூளுரைக்கின்றனர் இவ்வமைப்பைச் சார்ந்த தோழர்கள்.

இப்புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம் புரட்சிப் புயலாக தமிழகமெங்கும் சுழன்றடிக்கிறது. மக்களின் பேராதரவைப் பெற்றுள்ள இப்போராட்டம், அமெரிக்க 'கோக்'கை அடித்துவிரட்டாமல் ஒருபோதும் ஓய்ந்துவிடாது.

— பு.ஜ.செய்தியாளர்கள்



திருச்சி - உறையூரில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர் ராஜு.

## குர்கான்:
# தொழிலாளர்கள் மீது போலீசின் கொலைவெறியாட்டம் பு.ஜ.தொ.முவின் கண்டன ஆர்ப்பாட்டம்

குர்கானில் ஹோண்டா தொழிலாளர்கள் மீது அரியானா போலீசார் நடத்தியுள்ள கொலைவெறியாட்டத்தைக் கண்டித்தும், தொழிலாளர்களின் வீரம் செறிந்த போராட்டத்தை ஆதரித்தும் மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராகப் போராட தொழிலாளி வர்க்கத்துக்கு அறைகூவல் விடுத்தும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

• சென்னையில், 30.7.05 அன்று மாலை வள்ளுவர் கோட்டம் அருகே நடந்த ஆர்ப்பாட்டத்தில், ''இது வெறும் போலீசு வெறியாட்டமோ, தொழிற்சங்க உரிமை பறிப்பு குறித்த பிரச்சினை மட்டுமோ அல்ல. நாடு முழுவதும் ஏவிவிடப்பட்டிருக்கும் மறுகாலனியாதிக்கத்தின் கொடிய விளைவுதான் இது. இந்த உண்மையை உணர்ந்து தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் ஓரணியில் திரண்டு போராட வேண்டும்'' என்று உரையாற்றிய முன்னணியாளர்கள் குறிப்பிட்டனர். வர்க்க உணர்வோடு நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் தோழமைச் சங்கங்களின் - இணைப்பு சங்கங்களின் பிரதிநிதிகளும், திரளாகத் தொழிலாளர்களும் பங்கேற்றனர்.

• ஒசூரில் 3.8.05 அன்று மாலை காந்தி சிலையருகே நடந்த ஆர்ப்பாட்டத்துக்குத் தலைமையேற்று உரையாற்றிய தோழர் சீனு. இரவிச்சந்திரன், பன்னாட்டு நிறுவனங்களின் வருகையால், நவீன கொத்தடிமைத்தனமும் அடக்குமுறையும் பெருகி வருவதையும், மறுகாலனியாதிக்கத்துக்கு எதிராகச் சட்ட வரம்பை மீறிப் போராட வேண்டிய அவசியத்தையும் விளக்கினார். தொழிலாளி வர்க்கத்தின் முன்னணித் தலைமையாக தம்மைக் காட்டிக் கொள்ளும் எந்தவொரு தொழிற்சங்கமும் குர்கான் தாக்குதலுக்கு எதிராக எதுவும் செய்யாத நிலையில், பு.ஜ.தொ.மு. நடத்திய இந்த ஆர்ப்பாட்டம் தொழிலாளர்களிடம் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது.

• புதுவையில், பு.ஜ.தொ.மு.வின் இணைப்பு சங்கமான, காட்ரெஜ் சாராலீ ஊழியர் மற்றும் தொழிலாளர் சங்கத்தினர் பன்னாட்டு நிறுவனங்கள் இயங்கும் மேட்டுப்பாளையத்தில் 8.8.05 அன்று கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். முன்னணியாளர்களும் தோழமை அமைப்புகளின் பிரதிநிதிகளும் உரையாற்றிய இந்த ஆர்ப்பாட்டத்தில், திரளாகத் தொழிலாளர்கள் பங்கேற்றதோடு, வர்க்க உணர்வோடு எந்தச் சங்கமும் இப்படி பிரச்சாரமும் ஆர்ப்பாட்டமும் நடத்தியதில்லை என்று நம்பிக்கையோடு குறிப்பிட்டனர்.

பாண்டிச்சேரி - மேட்டுப்பாளையத்தில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டம்.



*தகவல்: பு.ஜ.தொ.மு., தமிழ்நாடு.*



படிப்பகம்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

வேண்டும்'' என்று எழுதப்பட்ட முழக்கத் தாளுடன் அவர் இரவு பகலாக விடாப்பிடியாக அங்கேயே நின்றார். இதைக் கண்டு பொதுமக்கள் திரளத் தொடங்கியதும், பீதியடைந்த புஷ் தனது உதவியாளர்களை அனுப்பி அவரைச் சாந்தப்படுத்த முயற்சித்தார். ஆனால், ஷீஹன் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார்.

நன்கொடை அளிக்கும் ஒரு பெருமுதலாளியுடன் நீண்ட நேரம் அளவளாவிவிட்டு, அவரை வழியனுப்ப புஷ் வெளியே வந்தபோது, ''பணக்காரர்களுக்காக நேரம் ஒதுக்க முடிந்த உங்களுக்கு, என்னுடன் பேசுவதற்கு மட்டும் நேரம் இல்லையா?'' என்ற முழக்கத்தை எழுதிப் பிடித்துக் கொண்டு ஷீஹன் நிற்பதைக் கண்டு மிரண்டு, உள்ளே ஓடிப் போய் பதுங்கிக் கொண்டார்.

அதிபர் புஷ்ஷுக்கு எதிராகவும், ஈராக் மீதான போருக்கு எதிராகவும் இரவு பகலாக ஷீஹன் விடாப்பிடியாகப் போராடிய இடம், மாண்டுபோன அவரது மகன் கேசியின் பெயரால் நினைவுத் திடலாக போர் எதிர்ப்பு இயக்கத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கே அடிக்கடி போர் எதிர்ப்புக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் தொடர்கின்றன.

பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான குடும்பத்தினர், மாண்டுபோன அமெரிக்கச் சிப்பாய்களின் பெயர் - புகைப்படங்களையும் வெண்சிலுவைக் குறி பொறித்த அட்டைகளையும் ஏந்தி ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். ''ஈராக் மீதான போரை நிறுத்து! அமெரிக்கப் படைகளை உடனே திரும்பப் பெறு!'' என்ற முழக்கம் புஷ்ஷின் பண்ணையில் மோதி எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

ஈராக்கில் அமெரிக்க சிப்பாய்கள் கொல்லப்படும் போதெல்லாம், அத்திடலில் பாதிக்கப்பட்ட இராணுவக் குடும்பங்கள் திரண்டு நினைவஞ்சலிக் கூட்டங்கள் நடத்துவதும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதும் தொடர்கிறது.

ஈராக்கில் போராளிகளின் குண்டு வீச்சினால் கொல்லப்பட்ட அமெரிக்கச் சிப்பாய் எட்வர்ட் ஷெரோடர் என்ற இளைஞனது சடலத்தை அடக்கம் செய்த பிறகு, ஆகஸ்ட் 15-ஆம் தேதியன்று கேசி ஷீஹன் திடலில் போர் எதிர்ப்பு இயக்கத்தினர் ஒரு நினைவஞ்சலிக் கூட்டத்தை நடத்தினர். அதில் உரையாற்றிய எட்வர்ட் ஷெரோடரின் தந்தையான பவுல் ஷெரோடர், ''நாங்கள் எங்கள் துயரத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக இங்கே வரவில்லை. எங்களது குமுறல்கள் அதிபர் புஷ் மீது நாங்கள் கொண்டுள்ள கோபத்தை அடிப்படையாகக் கொண்டவை. இந்தக் கோபம், உருக்குலைக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தின் நேர்மையான வெளிப்பாடு'' என்று குறிப்பிட்டதோடு, ''சின்டி ஷீஹன் அம்மையார், போர் எதிர்ப்பு இயக்கத்தின் ரோசா பார்க்ஸ் ஆவார்'' என்று பெருமையுடன் கூறுகிறார்.



அமெரிக்காவின் வியட்நாம் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்துப் போராடிய நாட்டுப்புற பாடகர் ஜோன் பெய்ஸ் அம்மையார், சின்டி ஷீஹனின் போராட்டத்தை ஆதரித்து நடத்திய இசை நிகழ்ச்சி.

1955-இல் ரோசாபார்க்ஸ் அம்மையார், இன ஒதுக்கல் கொள்கைப்படி பிரிக்கப்பட்ட பேருந்தின் முன்பக்க இருக்கையில் அமர்ந்து கொண்டு, எழ மறுத்துப் போராடினார். ஏனெனில், அவர் ஆப்பிரிக்க - அமெரிக்க கலப்பினத்தவர். கருப்பர்களுக்கும் கலப்பினத்தவருக்கும் பேருந்தின் பின்பகுதி இருக்கைகள் என இடஒதுக்கீடு செய்யப்பட்டு, அமெரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கை பின்பற்றப்பட்ட காலம் அது.

தன்னந்தனியே ரோசாபார்க்ஸ் அன்று நடத்திய போராட்டம், வெள்ளை நிற வெறியர்களின் புதிய வகை தீண்டாமைக்கு எதிரான மனித உரிமைப் போராட்டத்துக்குப் புது ரத்தம் பாய்ச்சியது. அவர் தொடங்கி வைத்த போராட்டம், அமெரிக்கா முழுவதும் காட்டுத்தீயாகப் பற்றிப் படர்ந்தது. ரோசாபார்க்ஸ், இறுதிவரை மனித உரிமை இயக்கத்தின் முன்னணி ஊழியராகச் செயல்பட்டார்.

ரோசாபார்க்ஸ் போலவே சின்டி ஷீஹனும் இன்று அமெரிக்க மக்களால் போற்றப்படுகிறார். தன்னந்தனியே அவர் நடத்திய போராட்டத்தால் சட்டத்துக்குக் கீழ்ப்படியாமை, அடக்குமுறையை எதிர்க்கும் உறுதி ஆகியவற்றின் அடையாளச் சின்னமாக அவர் கருதப்படுகிறார். தன்னந்தனியே ரோசாபார்க்சைப் போலவே சின்டிஷீஹன் போராடியிருந்த போதிலும், அவர் தனியானவர் அல்ல. போர் எதிர்ப்பு இயக்கத்தின் பிரிக்க முடியாத அங்கம்.

வியட்நாம் போர் எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் பிரபலமான நாட்டுப்புறப் பாடகர் ஜோன் பெய்ஸ் அம்மையார், கடந்த ஆகஸ்ட் 21-ஆம் தேதியன்று இரவு புஷ் பண்ணையின் எதிரே பெருந்திரளான மக்கள் முன் இசை நிகழ்ச்சியை நடத்தி ஈராக் போர் எதிர்ப்பு இயக்கத்துக்கு வலுவூட்டியுள்ளார்.

தனது மகனுக்காக மட்டுமல்ல; தனது மகனையொத்த இன்னும் பல இளைஞர்கள் அமெரிக்க வல்லரசின் ஒரு பொய்க்காக கொல்லப்படுவதைக் கண்டு குமுறும் ஷீஹனின் கோபம் உண்மையானது. இந்தப் போர் அநீதியானது; அது தடுக்கப்பட்டாக வேண்டும் என்ற உணர்வோடு அவர் நடத்திய போராட்டமும் உண்மையானது. அது, அமெரிக்க மக்களின் உள்ளார்ந்த கோபத்தையும் விரக்தியையும் வெளிப்படுத்தி, போர் எதிர்ப்பு இயக்கத்துக்கு வலுவூட்டி வருகிறது. அமெரிக்க மக்களிடமிருந்து மட்டுமின்றி, இராணுவக் குடும்பங்களிடமிருந்தும் புஷ் கும்பல் முற்றாகத் தனிமைப்பட்டுப் போய் கிடக்கிறது.

அமெரிக்கா, உலக மேலாதிக்க வல்லரசாக ஆக்கிரமிப்புப் போர்களை நடத்தி ஆணவத்தோடு கொக்கரிக்கலாம். ஆனால், அமெரிக்க மக்களிடம் இன்னமும் எஞ்சியிருக்கிறது மனசாட்சி. ஷீஹன் மூட்டிய போராட்டச் சிறு பொறி பெருங்காட்டுத் தீயாகப் பரவவே செய்யும். அன்று வியட்நாம் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமெரிக்க மக்கள் போராடியதைப் போல, ஈராக் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமெரிக்க மக்களின் போராட்டம் உள்நாட்டிலேயே எரிமலையாக வெடித்தெழப் போவது நிச்சயம்.

● குமார்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
Regn.No.TN/PMG(CCR)/621/03-05

www.padippakam.com

# தண்ணீரை வியாபாரமாக்காதே!

# தண்ணீரைத் தனியார்மயமாக்காதே!




தாமிரவருணியை உறிஞ்ச வரும்

# அமெரிக்க ‘கோக்’கை அடித்து விரட்டுவோம்!

நெல்லை கங்கை கொண்டானில் 12, செப் - 2005

# மறியல்

அணிதிரள்வோம்! ஆர்த்தெழுவோம்!

மக்கள் கலை இலக்கியக் கழகம் - விவசாயிகள் விடுதலை முன்னணி
புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி - புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி
தமிழ்நாடு

படிப்பகம்